வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

29.01.2021 வெள்ளிக்கிழமை




# பொத்துவில் முதல் பொலிகண்டிவரை மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம்!

## பெப்ரவரி 3 இல் ஆரம்பமாகி 4 நாள் நடக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முழு ஆதரவு

யாழ்ப்பாணம், ஜனவரி 29

வடக்கு - கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் விடுத்துள்ள அழைப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது ஆதரவை வழங்கும் எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 02



## 5 இலட்சம் தடுப்பூசிகள் நேற்று வந்து சேர்ந்தன!

### பொறுப்பேற்றார் கோட்டாபய

கொழும்பு, ஜன. 29

இந்திய மத்திய அரசின் அன்பளிப்பாக இலங்கைக்கு வழங்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தில் 02


## இலங்கைக்கு எதிரான நகர்வுக்கு பிரிட்டனின் தலைமை அவசியம்!

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தல்

ஜெனிவா, ஜன. 29

இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமைகள் நிலைமையை நிவர்த்தி செய்ய ஐ.நா. மனித உரிமைகள் 02

## மல்லிகை ஜீவா மறைந்தார்



கொழும்பு,ஜன.29

இலங்கையின் பிரபல எழுத்தாளரும், மல்லிகை மாத இதழின் ஆசிரியருமான டொமினிக் ஜீவா நேற்று மாலை தனது 94 வயதில் 02

## ஐ.நா. விவகாரத்தை எதிர்கொள்ள தயார்!

### இலங்கை நிச்சயம் வெற்றி பெறும் என்கிறார் அமைச்சர் கெஹலிய



கண்டி, ஜன.29

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விவகாரத்தை எதிர்கொள்ளத் தயார் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். 02



## வேகக்கட்டுப்பாட்டையிழந்தது கப் இளம் குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி!

### ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்

வடமராட்சி, ஜன.29

வேகக்கட்டுப்பாட்டையிழந்த கப் ரக வாகனம் கோர விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்தில் பலியானதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் 02

## ஐ.நா. ஆணையாளரின் பரிந்துரைகளை அமுலாக்க தவறின் மாற்று நடவடிக்கை

### இலங்கைக்கு அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, ஜன.29

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் புதிய அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு இலங்கை தவறும் பட்சத்தில், ஏனைய உறுப்பு நாடுகளுடன் இணைந்து மனித உரிமைகள் ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்று யோசனைகளை நடைமுறைப் படுத்தத் தயார் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. 02

## இலங்கையில் பொறுப்புக்கூறலை பிரிட்டன் தொடர்ந்து வலியுறுத்தும்

### ஜெனிவா வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 29

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வரவிருக்கும் அமர்வில் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து செயற்படத் தயாராக இருப்பதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. 02



04

தேசியப் பட்டியல் ஆசனம் ரணிலுக்கு



05

பெப். 4 கிளிநொச்சியில் கறுப்புப்பட்டி போராட்டம்



13

குறைந்த வயதில் சாதனை

## இன்று முதல் கொரோனா தடுப்பூசி விருப்பமில்லாதோர் தவிர்க்கலாம்

### ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவிப்பு

கொழும்பு,ஜன.29

இந்திய அரசாங்கம் வழங்கிய கொரோனா தடுப்பூசிகளின் முதல் தொகுதி நேற்று முற்பகல் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் முன்வைத்த வேண்டுகோளின் பேரில் 02

## இன்று முதல்...

கொரோனா தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.

விமானத்தின் விசேட குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டு கொண்டுவரப்பட்ட தடுப்பூசியின் மொத்த எடை 1323 கிலோ கிராமாகும்.

இத்தடுப்பூசிகள் விமான நிலைய வளாகத்தில் உள்ள குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டு குளிரூட்டப்பட்ட வாகனங்களின் மூலம் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசிகள் 2 - 8 இடைப்பட்ட டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

தடுப்பூசி ஏற்றல் மேல் மாகாணத்தின் 06 முக்கிய வைத்தியசாலைகளில் இன்று ஆரம்பிக்கப்படும்.

கொரோனா தடுப்பு நடவடிக்கையில் முன்னின்று செயல்படும் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் சுகாதாரப் பணியாளர்கள், ஒரு லட்சத்து 20 ஆயிரம் முப்படையினர், பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் துறையில் உள்ளவர்களுக்கு முதலில் தடுப்பூசி ஏற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் விதமாக சீன அரசாங்கமும் 3 லட்சம் தடுப்பூசிகளை வழங்கவுள்ளது என கொரோனா தடுப்பூசி கொள்முதல் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

கொரோனா தடுப்பூசி ஏற்றிக்கொள்வது தனிநபர்களின் சுயாதீனமான முடிவாகும். அதை விரும்பாதவர்கள் ஏற்றிக் கொள்ளாதிருக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

கொரோனா தடுப்பூசி கையளிக்கும் நிகழ்வை நினைவுகூரும் வகையில் இந்திய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ-எ)

## ஐ,நா. ஆணையாளரின்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் மிசெல் பச்லெட் சமர்ப்பிக்கவிருக்கும் 16 பக்கங்கள் கொண்ட முழுமையான அறிக்கை நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் சபையால் பகிரங்கப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், ஐ.நாவின் அறிக்கையை மேற்கோள்காட்டி வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் குழு உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியிருப்பதாக அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## இலங்கைக்கு...

பேரவை அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

அடுத்த மாதம் மனித உரிமைகள் பேரவை கூடும்போது ஒரு வலுவான தீர்மானத்தை முன்வைக்க உறுப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான அதன் உறுதிப்பாட்டைப் பின்பற்றுமாறும் மன்னிப்புச் சபை பிரிட்டனை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை தொடர்பான ஐ.நா.வின் மோசமான அறிக்கையைத் தொடர்ந்து இலங்கைக்கு எதிரான நீதிக்கான சர்வதேச உந்துதலுக்கு பிரிட்டன் தலைமை தாங்கவேண்டும் என்றும் அந்தச் சபை கோரியுள்ளது.

போர் நிறைவடைந்து சுமார் 12 வருடங்கள் ஆகியும், மோசமடைந்து வரும் மனித உரிமை நிலைமை மற்றும் எதிர்காலத்தில் அதிகரிக்கூடிய ஆபத்து பற்றியும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் எச்சரித்துள்ளது.

இந்நிலையில் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வழங்குவதில் இலங்கையின் மோசமான நிலையையும் நாட்டில் மனித உரிமைகள் மீது ஏற்படுத்தியிருக்கும் விளைவையும் காட்டுகிறது என சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை குறித்து இன்னும் கடுமையான மேற்பார்வை செய்ய அறிக்கையின் முக்கிய பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

## வேகக்கட்டுப்பாட்டை...

டுள்ளார் என நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் நெல்லியடி நகர்ப் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் கப் ரக வாகனத்தைச் செலுத்துச் சென்ற வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பேணாட் கரன் (வயது -40) ஸ்தலத்திலேயே பலியானார். அவருடன் வாகனத்தில் பயணித்த வவுனியாவைச் சேர்ந்த சிவலிங்கம் மதிவண்ணன் (வயது- 42) படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கப் ரக வாகனமே வேகக்கட்டுப்பாட்டையிழந்து மக்கள் வங்கி கிளைக்கு அருகாமையில் உள்ள மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. இதில் கப் வாகனம் முற்றாகச் சேத மடைந்தது.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பதில் நீதிவான் நடராஜா ராஜிவனின் உத்தரவுக்கமைய கரவெட்டி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (அ-எ-02)

## பொத்துவில்...

எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை மேற்கொள்ளவுள்ள இந்தப் போராட்டம் தொடர்பில் சிவில் சமூகம் விடுத்துள்ள அழைப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை அரசாங்கத்தால் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும்நிலையில் அரச திணைக்களங்கள் ரீதியிலான ஆக்கிரமிப்பும் தொடர்வதனை வெளிக்கொணரும் வகையில் வடக்கு - கிழக்கில் செயல்படும் சிவில் அமைப்புக்கள் பல இணைந்து விடுத்துள்ள அழைப்புக்கு வலுச்சேர்க்கும் வகையில் கூட்டமைப்பும் தனது ஆதரவைத் தெரிவிக்கின்றது.

வடக்கு - கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்ட பாரம்பரிய இந்து ஆலயங்களைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகள், மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள், போராட்டங்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்களைத் தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றமை, கருத்து சுதந்திரம் மீறல் ஆகியவற்றோடு தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றமை போன்ற செயல்களைக் கண்டித்து இடம்பெறும் இப்போராட்டத்துக்கு எமது ஆதரவோடு அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் என்ற அழைப்பையும் விடுகின்றோம்- என்றார். (அ-எ-2)



## 5 இலட்சம்...

வைத்துப் பொறுப்பேற்றார்.

இந்தியாவின் வெக்சின் மைத்ரி திட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் நேற்று முற்பகல் 11.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன.

தடுப்பூசிகளை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

முதல் கட்டமாக இலங்கைக்கு 5 லட்சம் தடுப்பூசிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்திய விமான சேவைக்குச் சொந்தமான எயார் பஸ் 321 விமானம் மும்பாய் விமான நிலையத்தில் இருந்து தடுப்பூசிகளை எடுத்து வந்தது.

42 பெட்டிகளில் அடைக்கப்பட்ட நிலையில், குறித்த தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. (அ)

## ஐ.நா. விவகாரத்தை...

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை இழந்தது. இதன் விளைவாக தற்போதைய அரசாங்கம் பல தடைகளை எதிர்கொண்டுள்ளது.

இலங்கையில் நிலவும் சூழ்நிலை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு பல்வேறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. மேலும் சில குழுக்கள் இலங்கையை தற்போதைய விவகாரத்துக்கு இட்டுச் சென்றன.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அதன் நடவடிக்கைகளுக்கு இலங்கை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் உலகுக்கு பதிலளிக்கும்.

நல்லாட்சி அரசாங்கம் 30-1 தீர்மானத்தை அறிமுகப்படுத்தி, நாட்டுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதோடு இராணுவ வீரர்களை தண்டிப்பதாக உறுதியளித்தது.

எனவே பொய் சொல்லும் சர்வதேச சக்திகளுக்கும், உண்மையை சொல்லும் தற்போதைய ராஜபக்ஷ அரசாங்கத்தின் நேர்மைக்கும் இடையிலான மோதலில் இலங்கை நிச்சயம் வெற்றிபெறும்- என்றார். (அ-எ)

## இலங்கையில்...

ஜெனிவாவில் உள்ள ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஜூலியன் பிரத்வைட், இலங்கை தொடர்பான புதிய ஐ.நா மனித உரிமைகள் அறிக்கையையும் பிரிட்டன் பரிசீலிக்கும் என கூறியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் சமர்ப்பிக்கவிருக்கும் 16 பக்கங்கள் கொண்ட முழுமையான அறிக்கை நேற்று முன் தினம் வெளியான நிலையில் இதுகுறித்து டுவிட்டரில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில்” இலங்கை தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையினால் வெளியிடப்பட்டிருக்கும் மிக முக்கியமான புதிய அறிக்கை குறித்து நாம் அவதானம் செலுத்தியிருக்கிறோம்.

எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரின் போது இலங்கையில் மனித உரிமைகளையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி பிரித்தானியா ஆதரவு வழங்கும்” என பதிவிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் புதிய அறிக்கையில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அமுல்படுத்துவதற்கு இலங்கை தவறும் பட்சத்தில், மாற்று யோசனைகளை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக அமெரிக்கா எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மல்லிகை ஜீவா...

கொழும்பில் காலமானார்.

யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட டொமினிக் ஜீவா, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர உறுப்பினராவார். இவர் இலக்கிய ஈடுபாடு காரணமாக 1966 இல் மல்லிகை இலக்கிய சஞ்சிகையை ஆரம்பித்தார். தொடர்ச்சியாக 49 வருடங்களாக அதனைத் தொடர்ந்து நடத்தினார்.

இலங்கையில் முதல் சாகித்திய விருது பெற்ற தமிழ் எழுத்தாளர் என்ற பெருமையை பெற்ற டொமினிக் ஜீவா, மூன்று சிறுகதைத் தொகுதிகளையும், தனது சுயசரிதையை இரண்டு பாகங்களாக எழுதி வெளியிட்டுள்ளார். (அ-எ)

## இன நல்லுறவாக...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிக சிறப்பான முறையில் கையாளுகின்றது.

பத்து குகை முருகன் ஆலயம் அழகான முறையில் நிலத்திலிருந்து 300 அடி உயரத்தில், சுண்ணாம்புக் கற்கள் சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ளது. ஏறத்தாள 400 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த புவியியல் அமைப்பைக் கொண்டதாகவும் இக்குகை இருக்கின்றது.

இங்குள்ள முருகன் ஆலயம் 100 வருடங்களுக்குமேல் பழமை வாய்ந்ததாகும். இங்கு செல்வதற்கு 272 படிக்கட்டுகள் இருக்கின்றன. அத்துடன், இப்படிக்கட்டுகளின் ஆரம்பத்தில் மிக உயரமான முருகன் சிலையும் காணப்படுகிறது. இதன் உயரம் 141 அடிகளாகும் . இத்தடவை இம்மலைக் குகையின் படிக்கட்டுகள் வானவில் நிறங்களில் தைப்பூசத்தை முன்னிட்டு நிறமூட்டப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் மலாய் நாட்டவர்கள், சீனர்கள் மற்றும் அங்குள்ள பெருந்தொகையான இந்தியாவையும், இலங்கையையும் பூர்வீகமாகக்கொண்ட மக்கள், ஆயிரக்கணக்கில் பல்வேறு அலங்காரங்களுடைன் பல ரகத்திலுமான காவடிகளை எடுத்துவந்து முருக வழிபாட்டில் தைப்பூச தினத்தன்று கலந்துகொள்கின்றனர்.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இஸ்லாமியர்களையும் சீனர்களையும் பெரும்பான்மையாக கொண்டுள்ள போதிலும் இன, மத ஐக்கியத்திற்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தையே ஆண்டுதோறும் இந் நாடுகளில் இடம் பெறுகின்ற தைப் பூசத் திருவிழா மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

ஈழநாடு
Eelanadu
28.01.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, தை 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# இருப்பதையும் இழக்கும் நிலை வரலாம்

ஐ. நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் காட்டமான அறிக்கை தொடர்பில் தமிழ்ச் சூழலில் ஓர் இனம்புரியாத மகிழ்ச்சி தாண்டவமாடுவதைக் காண முடிகின்றது. இதற்கு என்ன காரணம்? கடந்த பத்து வருடகால பேரவையின் அணுகுமுறைகளில் முதன் முதலாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பில் பேசப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில்தான் தமிழர் தரப்பில் ஒருசிலர் மகிழ்ச்சியடைந்திருக்கின்றனர். குறிப்பாக, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தாம் நீண்டகாலமாக கூறிவரும் விடயம் தற்போது நடந்திருப்பதாகவும், இது தொடர்பில் தாங்கள் மட்டுமே உறுதியாகவும் நேர்மையாகவும் இருந்தனர் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், இங்கு கவனிக்க வேண்டிய விடயம் வேறு. அதாவது, பேரவையின் ஆணையாளர் தனது பரிந்துரைகளையே முன்வைத்திருக்கின்றார். மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை அல்லது பேரவையின் பிரேரணைகள் - எவையுமே நாடுகளைக் கட்டுப்படுத்தாது. அவை முற்றிலும் பரிந்துரைகள் மட்டுமே! அரசாங்கங்கள் ஒன்றில் அதனை ஏற்கலாம் அல்லது ஏற்காமலும் விடலாம். ஒரு நாடு பேரவையின் பரிந்துரைகளை நிராகரிக்கும்போது, பேரவையால் எதனையும் செய்ய முடியாது. அவ்வாறான சூழலில் ஐ.நா பொதுச் சபைக்கு அல்லது ஐ. நா பாதுகாப்பு பேரவைக்கு சில பரிந்துரைகளை முன்வைக்கலாம். அவ்வாறானதொரு விடயம்தான் இப்போது இலங்கை விவகாரத்திலும் நடந்திருக்கின்றது. அதவாது, பேரவையின் ஆணையாளர், ஐ. நா மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளுக்கு முன்னால் சில பரிந்துரைகளை முன்வைத்திருக்கின்றார். இலங்கை அரசாங்கம் முன்னைய அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருந்த பிரேரணையிலிருந்து வெளியேறியிருக்கும் நிலையில் இதனை எவ்வாறு முன்கொண்டு செல்லலாம் என்பது தொடர்பில் அவர் தனது ஆலோசனைகளை முன்வைத்திருக்கின்றார். அதில்தான் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலும் பேசியிருக்கின்றார்.

ஆணையாளர் கூறிவிட்டார் என்பதற்காக அங்கத்துவ நாடுகள் கண்ணை மூடிக்கொண்டு அதனை ஆதரிக்கப் போவதில்லை. ஏனெனில், இதனை ஒரு பிரேரணையாக முன்வைக்கும் போது, அதனை உறுப்பு நாடுகள் ஆதரிக்க வேண்டும். உறுப்பு நாடுகள் வாக்களிப்பின்போது மனித உரிமைகளின் மீதான அக்கறையால் வாக்களிப்பதில்லை. மாறாக, ஒவ்வொரு நாடும் தனது நலன்களை நிறுத்துப் பார்த்துத்தான் வாக்களிக்கும். இதே பேரவையில்தான் 2009இல் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தைப் பாராட்டி தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டிருந்தது. பின்னர் அந்த நிலைமைகள் மாறின. இதற்குக் காரணம் அமெரிக்கா நேரடியாகக் களத்தில் இறங்கியமையாகும்.

இந்த நிலையில் இப்போது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நம்பி அரசியல் செய்ய சிலர் முற்படுகின்றனர். இங்குள்ள பிரச்னை - சில விடயங்களை அரசாங்கம் தெளிவாகக் கணித்தே நகர்கின்றது. சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நடைமுறையென்பது ஒரு நீண்ட பயணம். அதேவேளை, அந்தப் பயணத்தின் முடிவு எவ்வாறு அமையுமென்றும் எவரும் அறியார். இதற்கு இடைப்பட்ட காலத்தில் அரசாங்கம் தான் நினைக்கும் அனைத்தையும் செய்து முடித்துவிடும். இதேவேளை, இந்த இடைப்பட்ட காலத்தில் குற்றச்சாட்டுக்கு உள்ளான அனைவரும் வயது முதிர்வால் இயற்கையாகவே விடைபெற்றிருப்பர். பின்னர் யாரை தண்டிப்பது? இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் மிகவும் தெளிவாக இருக்கின்றது.

ஆனால், மாரீசனை, மான் என்று நம்பி ஏமாந்துபோன சீதை போன்று, தமிழர் தரப்புக்களும், நடக்குமா அல்லது நடக்காதா என்பது பற்றி அறிந்துகொள்ள முடியாத விடயங்களை நம்பி, இருப்பதையும் இழந்து, கையறு நிலைக்கு செல்லப்போகின்றனரா?

# இன நல்லுறவு பாலமாக
## மலேசியா - சிங்கப்பூரில் தைப் பூசம்!

- அலசுவது **இராஜதந்திரி** -

இலங்கையில் வரலாற்று முக்கியத்துவமிக்க வழிபாட்டுத்தலங்கள் பேரினவாதிகளின் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவது அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ள நிலையில், மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல்லின, பலமதங்களைக் கொண்ட நாடுகள் இன, மத ஐக்கியத்துக்கு முன்னுதாரணமாக இருப்பதை நேற்றைய தினம் இவ்விரு நாடுகளிலும் கொண்டாடப்பட்ட தைப்பூச விழா எடுத்துக்காட்டியிருந்தது.

வவுனியாவில் வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிசிவன் ஆலயம், மற்றும் முல்லைத்தீவு பகுதியிலுள்ள குருந்தூர் மலையிலிருக்கும் சிவன் வழிபாட்டுத்தலம், திருகோணமலையிலுள்ள கன்னியா வெந்நீர் ஊற்று என்பவை கடந்த சில மாதங்களாக மதவாதிகளால் அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கின்றன. இந்த அச்சுறுத்தல்கள், அகழ்வாராய்ச்சி என்ற வகையில் அரசாங்கத்தின் அனுசரணையோடு மேற்கொள்ளப்பட்டு வருவதே கவலைக்குரியதாக இருக்கின்றது. நில அபகரிப்பு, அத்துமீறிய குடியேற்றங்கள் போன்றவை வடக்கு-கிழக்கில் இனப்பூசல்களுக்கான முக்கிய காரணங்களாக விளங்கி வந்தன.

**இனப் பூசல்களுக்கான காரணிகள்**

ஆனால், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல, எக்காரணங்கள் இனப்பூசல்களுக்கு மூலகாரணங்களாக இருந்தனவோ அக்காரணங்கள் மீளவும் தலையெடுக்க ஆரம்பித்துள்ளன.

இரு தினங்களுக்கு முன்னர் குருந்தூர் ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபையினர் தமது எதிர்ப்பை அகழ்வாராய்ச்சியாளருக்கு வெளியிட்டதால் கைதாகி விடுதலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு-கிழக்கு பிரதேசங்கள் அபரிமிதமான வளங்களை சகல துறைகளிலும் கொண்டுள்ளன. இவ்வளங்களை தகுந்த முறையில் பயன்படுத்தி அபிவிருத்திகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, அகழ்வாராய்ச்சி என்ற ரீதியில் அரசியல் நோக்கங்களுக்காக தமிழர்களது பாரம்பரிய பிரதேசங்கள் அத்துமீறப்பட்டு வருகின்றன.

**மக்களின் எதிர்பார்ப்பு**

யுத்தம் முடிவுற்றதுமே அபிவிருத்தி குறித்த எதிர்பார்ப்பே வடக்கு-கிழக்கு மக்களிடம் காணப்பட்டிருந்தது. எனவே, அபிவிருத்தி நடவடிக்கைகளை உரிய வகையில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளாது, இனவாத நோக்கத்தோடு அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகிறது.

இத்தகைய சூழலிலேயே பல்லினத்தன்மை கொண்ட சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் சகல இனமக்களதும் தனித்துவங்கள் நல்ல முறையில் மதிக்கப்பட்டும் , பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.



மலேசியா, சிங்கப்பூர்போன்ற நாடுகளின் இன்றைய உயர்வான நிலைக்கு, ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தமிழர்கள் வழங்கிய பங்களிப்பும் முக்கிய காரணமாகும். சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு இலங்கையை பூர்வீகமாகக்கொண்ட அந்நாட்டின் முன்னாள் துணைப் பிரதமரும், வெளிநாட்டமைச்சருமான இராஜரத்தினம் பெரும்பங்காற்றியிருந்தார்.

**சிங்கப்பூர் இராஜரத்தினம்**

சிங்கப்பூரின் ஸ்தாபக பிரதமரான லீ குவான் யூவிற்கு பக்கபலமாக நின்று சிங்கப்பூரை இராஜரத்தினம் கட்டியெழுப்பியிருந்தார். இதுதவிர, இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட மற்றொருவரான தற்போதைய உதவிப் பிரதமர் தர்மரத்தினம், சிங்கப்பூரின் அடுத்த பிரதமராக பதவியேற்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் தீபாவளி, தைப்பொங்கல், நவராத்திரி போன்ற இந்து மத பண்டிகைகள் மேற்குலகில் கிறிஸ்மஸ், ஈஸ்டர் போன்ற பண்டிகைகளுக்கு நிகரான முறையில் கொண்டாடப்படுகின்றன.

இந்துப்பண்டிகைகளில் ஜனவரி மாதம் தோன்றுகின்ற முதலாவது பௌர்ணமி நிலவோடு கூடிவருகின்ற தைப்பூசம் முதன்மையானதாக மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் கொண்டாடப்படுகின்றது. மலேசியா, சிங்கப்பூரில் தைப்பூசத்தின் சிறப்பு என்னவெனில், தமிழர்கள் மாத்திரமல்ல. இவ்விரு நாடுகளிலும் பெரும்பான்மையாக வாழ்கின்ற சீனர்கள் மற்றும் மலாய் இனத்தவர்களும் பெருவிருப்போடு தைப்பூச வழிபாட்டு நிகழ்வுகளில் குதூகலமாக பங்கேற்கின்றனர்.

**பத்து மலைக்குகை முருகன்**

மலேசியாவின் சிரங்கூன் பத்து மலைக் குகைகளில் இருக்கின்ற (Qatu caves) முருகன் ஆலயம் / தைப்பூச விழாவுக்கு உலகப் பிரசித்தி பெற்றதாகும். பக்திபூர்வமான தைப்பூச விழாவை இன, மத நல்லுறவை பேணவும், மலேசியாவின் உல்லாச பயணத்துறையை மேம்படுத்தவும் மலேசிய அரசாங்கம்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# தேசியப் பட்டியல் ஆசனம் ரணிலுக்கு

## அர்ஜூன ரணதுங்க கூறுகிறார்



கொழும்பு, ஜன.29

**ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைக்கப் பெற்ற ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றம் செல்ல வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியில் தோல்வியடைந்தவர்களில் இருந்து பாராளுமன்றம் செல்ல அவரே தகுதியானவர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கட்சியை அடிப்படையாகக் கொண்டு அரசியலில் ஈடுபடவில்லை. கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டுள்ளோம்.

இடம்பெற்று முடிந்தபொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைவதற்கு பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. 2020ஆம் ஆண்டுக்கு பின்னர் கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினால் கட்சி இரண்டாக பிளவடைந்தது.

ஜனநாயகத்தை அரசாங்கத்திடம் பாதுகாக்கவேண்டுமாயின் பலமான எதிர்க்கட்சி ஒன்று செயற்படவேண்டிய தேவை காணப்படுகிறது.

தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் அனைத்து தரப்பினரையும் ஒன்றினைத்து வலுவான திட்டங்களை வகுப்பது தற்போதைய பிரதான செயற்பாடாக காணப்படுகிறது.

நாட்டின் எதிர்காலப் பயணத்துக்கு கட்சி அடிப்படையில் சிறந்த கொள்கை திட்டம் வகுக்காமையின் காரணமாகவே வழங்கப்பட்ட சிரேஷ்ட உப தலைவர் பதவியை ஏற்க மறுத்துள்ளேன்.

ஒரு தரப்பினரது தேவைக்கமைய கட்சியை மறுசீரமைப்பதால் அடைந்த தோல்வியை சீர் செய்ய முடியாது.

ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைக்கப் பெற்ற ஒரு தேசிய பட்டியல் ஆசனம் தொடர்பில் இதுவரையில் ஒரு தீர்மானம் எடுக்கப்படவில்லை தோல்வியடைந்தவர்கள் மத்தியில் இருந்து கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளோம். அரசாங்கத்தின் குறைப்பாடுகளை சுட்டிக்காட்டும் தகைமை அவருக்கு மாத்திரம் உண்டு - என்றார்.

# கதிர்காமம் வள்ளியம்மன் பூசகருக்கு தொற்று உறுதி

கொழும்பு, ஜன. 29

கதிர்காமம் ஸ்ரீவள்ளியம்மன் ஆலயப் பிரதம பூசகருக்கும், அவரது மனைவிக்கும் கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது பி.சி.ஆர். பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கதிர்காமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சமன் திஸநாயக்க தெரிவித்தார்.

இதையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உடனடி உத்தரவின் பேரில் ஸ்ரீவள்ளியம்மன் ஆலயம் நேற்று முதல் மீள் அறிவிருக்கும் வரையில் மூடப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 15 நாட்களில் இந்த ஆலயத்துக்கு வந்து வழிபாடு நிகழ்வுகளில் கலந்துகொண்டு தத்தம் ஊர்களுக்குச் சென்றவர்கள் மற்றும் கதிர்காமத்திலிருந்து இந்த ஆலயத்துக்கு வந்து சென்றவர்கள் அவ்வப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதர்களிடம் உடன் அறிவிக்கும்படி கதிர்காமம் பொதுச் சுகாதாரப் பிரிவினரால் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆலயப் பூசகரின் உறவினர் ஒருவரது மரணச் சடங்குகளில் கலந்துகொண்டிருந்தவர்களில் எவருக்கேனும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம். அவர்களிடமிருந்து ஆலயப் பூசகருக்கும் அவரது மனைவிக்கும் கொரோனாத் தொற்று பரவியிருக்கலாம் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது எனச் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேலும் கூறியுள்ளனர்.




**மேடம்**
வெற்றிகள் குவிய வேலவனை வழிபட வேண்டிய நாள். உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். உத்தியோக மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள்.

**இடபம்**
தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும் நாள். சகோதர வழியில் சுபச்செய்தியொன்று வந்து சேரலாம். முன்னேற்றத்திற்காக எடுத்த முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
ஆரோக்கியத்தில் அக்கறைகாட்ட வேண்டிய நாள். தொழில் ரீதியாக எடுத்த முடிவில் குழப்பங்கள். பணத் தேவைகள் பூர்த்தியாகும். பிரச்னைகள் ஏற்படலாம்.

**கடகம்**
சஞ்சலங்கள் அகல சண்முகநாதரை வழிபட வேண்டிய நாள். திறமை பளிச்சிடும். நீண்ட நாளைய எண்ணம் நிறைவேறும். பிள்ளைகள் வழியில் நல்ல செய்தி.

**சிம்மம்**
வழிபாட்டில் ஆர்வம் காட்டும் நாள். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். பெற்றோர் நலனில் அதிக அக்கறை எடுத்து கொள்வீர்கள்.

**கன்னி**
விரயம் அதிகரிக்கும் நாள். அடுத்தவர் நலனுக்காக எடுத்த முயற்சியில் அலைச்சல்களை சந்திக்க நேரிடும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைப்பது அரிது.

**துலாம்**
சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழும் நாள். இல்லத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர் வம் காட்டுவீர்கள். எதிர்பாராத தனலாபம் வந்து சேரலாம்.

**விருட்சிகம்**
காரிய வெற்றிக்கு வழிபட வேண்டிய நாள். காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**தனுசு**
பொறுமையை கடைபிடிக்க வேண்டிய நாள். பொது நலத்தில் ஈடுபடும் பொழுது கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. நண்பர்களின் உதவியை நாடுவீர்கள்.

**மகரம்**
குறைகள் அகலக் குகனை வழிபட வேண்டிய நாள். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்**
விடியும் பொழுதில் வியப்பான செய்தி வந்து சேரும் நாள். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நல்ல விதமாக முடியும். வரவு திருப்தி தரும்.

**மீனம்**
முன்னேற்றம் கிடைக் கும் நாள். உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் உருவாகும். தாழ்வு மனப்பான்மையில் இருந்து விடுபடுவீர்கள்.

# எதிர்க்கட்சி கூட்டணியை உருவாக்கப்போகிறோம்

## நவீன், அர்ஜூன இணைந்து அறிவிப்பு

கொழும்பு, ஜன. 29

முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான நவீன் திஸநாயக்க மற்றும் அர்ஜூன ரணதுங்க ஆகியோர் பரந்த எதிர்க்கட்சி கூட்டணியை உருவாக்குவதற்கான முயற்சிகளுக்கு தலைமை தாங்க முடிவு செய்துள்ளனர்.

நேற்று இருவரும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய பயணத்தில் நவீன் ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்.கட்சியின் மறுசீரமைப்பு கட்சி தலைமையிலிருந்து கீழ் மட்டம் வரை நடந்திருக்க வேண்டும் என்றாலும், அவ்வாறு செய்யாதமைக்கு வருத்தம் தெரிவிப்பதாக நவீன் தெரிவித்தார். கட்சியில் சரியான தலைமை மாற்றம் இருக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இரு எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களின் ஆதரவோடு ஒரு பரந்த எதிர்க்கட்சி கூட்டணியை உருவாக்க முயற்சிப்போம் என்று இருவரும் தெரிவித்தனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள ஒரு பொதுவான எதிர்க்கட்சி வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதை இலக்காகக் கொள்வோம் என்றும் அவர்கள் கூறினர்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்பதற்கு நவீன் அண்மையில் மறுப்பு தெரிவித்திருந்தார். எனினும், அவர் தொடர்ந்து ஐ.தே.கவுடன் இருப்பார், அதன் கொள்கைகளுக்கு மதிப்பளிப்பார் என்றார்.

கட்சியின் நுவரெலியா மாவட்டத் தலைவராகவும், செயற்குழு உறுப்பினராகவும் செயல்படுவேன் என்று நவீன் திஸநாயக்க கூறினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜூன ரணதுங்க இந்த வாரம் ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த துணைத் தலைவர் பதவியை ஏற்க மறுப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ரி.ஐ.டியின் தடுப்பிலுள்ள 16 பேருக்கு கொரோனா!

வவுனியா, ஜன. 29

வவுனியாவில் பயங்கரவாத தடுப்பு பிரி வில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட ஒருவருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட ஏனையவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் பயங்கரவாத தடுப் புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# மேலும் 30 இலட்சம் தடுப்பூசிகள் இந்தியாவிடமிருந்து பெறப்படும்

கொழும்பு, ஜன. 29

இந்தியாவிடமிருந்து மேலும் 30 இலட்சம் தடுப்பூசி மருந்தை கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.இந்தியாவினால் நன்கொடை யாக வழங்கப்படும் 5 இலட்சம் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகள் நேற்றுக் காலை நாட்டுக்கு கொண்டு வரப்பட்டன. சீரம் இன்ஸ்டிடியூட் ஒவ் இந்தியாவால் தயாரிக்கப்படும் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ரா ஜெனெகாவின் கோவிஷீல்ட் தடுப்பூசி அவசரகாலப் பயன்பாட்டிற்காக இலங்கை அரசாங்கத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

# பெப். 4 கிளிநொச்சியில் கறுப்புபட்டி போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

கிளிநொச்சி,ஜன.29



**நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு கறுப்பு பட்டி அணிந்து மாபெரும் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் ஒன்றை வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து 6ஆம் திகதி வரை நடத்த வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் திட்டமிட்டுள்ளது.**

சுதந்திரதினமான பெப்ரவரி 4ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடக்கும் மாபெரும் நீதிப் போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அந்தச் சங்கத்தின் தலைவி யோ.கனகரஞ்சினி அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் 2ஆம் திகதியில் இருந்து 6ஆம் திகதி வரை வடக்கு - கிழக்கில் அனைத்து மாவட்டங்களில் அடையாள உணவு ஒறுப்பு போராட்டம் நடைபெறும்.

அத்தோடு பெப்ரவரி 4ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி முன்றலில் இடம்பெறும் போராட்டத்தில் அனைவரும் கறுப்பட்டி அணிந்து பங்கு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

# கலாசாரச் சீரழிவில் ஈடுபட்டதாக கைதான இரு பெண்கள் உட்பட நால்வரும் மறியலில்

யாழ்ப்பாணம், ஜன. 29

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் இளம் பெண் கலாசாரச் சீரழிவில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 2 பெண்கள் உள்ளிட்ட நால்வரையும் எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன், 20 வயதுப் பெண்ணைச் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவ பரிசோதனை அறிக்கையைப் பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராசா, பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஓட்டோவில் கலாசார சீரழிவில் ஈடுபட்டு வந்த பெண்கள் இருவர் உட்பட நால்வர் மானிப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

45 வயதுடைய சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், கோப்பாயைச் சேர்ந்த 20 வயதுடைய பெண்ணை வைத்து இந்த கலாசார சீரழிவைப் பணத்துக்காக முன்னெடுத்துள்ளார்.

அவர்களுக்கு உடந்தையாக தெல்லிப்பழையைச் சேர்ந்த ஓட்டோச் சாரதி ஒருவரும் நெல்லியடியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரும் செயற்பட்டுள்ளனர். அந்த நான்கு பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கலாசாரச்சீரழிவு இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இரகசியப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஊடாக கும்பலுடன் தொடர்பை ஏற்படுத்திய மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அந்தக் கும்பலைச் சேர்ந்த நால்வரையும் கைது செய்திருந்தார்.

சந்தேக நபர்கள் நால்வரும் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை முற்படுத்தப்பட்டனர். அதன்போதே நால்வரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.



# இரண்டு கிலோ கஞ்சாவுடன் மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரின் விசேட சுற்றிவளைப்பின்போது நேற்றுக் காலை 2 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஓர் ஓட்டோவும் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டுள்ளவர்கள் வட்டுக்கோட்டை மற்றும் திவுலப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள்.

மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா வியாபாரத்தை மேற்கொண்டு வந்த நபர்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# சட்டவிரோதமாக ஏற்றிய மண்ணுடன் சிக்கிய பலநோக்கு கூட்டுறவுச்சங்க உழவு இயந்திரம்

முல்லைத்தீவு, ஜன. 29

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான உழவியந்திரம் சட்டவிரோதமாக மண் ஏற்றியபோது சிக்கியுள்ளது.

கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், தன் சொந்த வேலைக்கு மண் ஏற்றியபோதே சிக்கியதாக விமர்சனம் எழுந்துள்ளது.

எனினும், சங்கத் தலைவர் பின்னர் அனுப்பிய செய்திக் குறிப்பில், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலைத் திருத்த வேலைக்கே மண் ஏற்றியதாகக் குறிப்பட்டுள்ளார்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான உழவு இயந்திரம், சட்டவிரோதமாக மணல் ஏற்றிவரும்போது, கடந்த 24ஆம் திகதி முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. கூட்டுறவுச் சங்கத்தின் சாரதி அதனை செலுத்தவில்லை.



குமுளமுனைப் பகுதியில் வசிக்கும் குறித்த கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், குமுளமுனைப் பகுதியில்தான் சொந்தமாக அமைத்துவரும் நெற்களஞ்சிய சாலையின் கட்டுமானத்துக்காக, தனது சாரதியைப் பயன்படுத்தி மணல் ஏற்றியதாக ஒரு தரப்பு குற்றம்சாட்டியுள்ளது.

தற்போது உழவியந்திரம் முற்றாக தறப்பாள் கொண்டு பெயர் வெளியே தெரியாதவாறு மூடப்பட்டு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கூட்டுறவு சங்கத் தலைவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில், கடந்த வியாழக்கிழமை குமுழமுனையில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலைத் திருத்த வேலைக்காக ஏற்றிவரப்பட்ட மண்ணை, பொலிஸார் இடைமறித்து பிடித்துச்சென்று முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தொடுத்திருந்தனர். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலைத் திருத்த வேலைக்கே மண் ஏற்றப்பட்டிருந்தது.

அத்தோடு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் பொதுமுகாமையாளர், பணியாளர்கள், இயக்குனர்சபை உறுப்பினர்கள், அரிசி ஆலை உபசபையின் உறுப்பினர்கள், பலநோக்குகூட்டுறவுச் சங்கத் தலைவர் என்ற வகையில் நானுமாக கிட்டத்தட்ட 25 பேருக்கும் மேற்பட்டவர்களின் பிரசன்னத்திலேதான் அந்த அரிசி ஆலையின் சீரமைப்பு வேலைகள் இடம்பெற்றிருந்தன என தெரிவித்துள்ளார்.



# நயினாதீவு ஆலய அறநெறி மாணவர்களுக்கு இசைக்கருவிகளை வழங்கிவைத்தது இந்தியா

யாழ்ப்பாணம், ஜன. 29

நயினாதீவு ஆலயத்தில் அறநெறி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் இந்தியாவினால் இசைக் கருவிகள் ஆலய நிர்வாகத்திடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

தைப்பூச நன்னாளில் (ஜனவரி 28, 2021), இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் 2 லட்சம் ரூபா மதிப்புள்ள வீணை, வயலின், ஹார்மோனியம், மிருதங்கம் மற்றும் புல்லாங்குழல் ஆகிய இசைக் கருவிகளை நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலுக்கும், 3 லட்சம் ரூபா மதிப்புள்ள புத்தகங்களின் தொகுப்பை கோவில் நூலகத்திற்கும் கொடையாக வழங்கினார்.

இதனை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில், கோவிலின் அறங்காவலர் சபை தலைவர் ப.க.பரமலிங்கம், இந்தியத் துணைத்தூதுவர் பாலச்சந்திரனிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

# 1869 பேர் குணமடைவு

கொழும்பு, ஜன. 29

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து ஆயிரத்து 869 குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச் சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவே நாளொன்றுக்கு பதி வாகிய அதிகபட்ச எண்ணிக்கை என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் அதிகளவி லான அதாவது 1,520 குணமடைந்தமையே அதிக எண்ணிக்கையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 54 ஆயிரத்து 435 ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 60 ஆயிரத்து 694 ஆக காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 969 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை 781 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.



# கர்ப்பவதித் தாய்மாருக்கு உலர் உணவுப் பொருள்கள்

## யாழ். படைத் தளபதி வழங்கினார்

யாழ்ப்பாணம், ஜன. 29

கர்ப்பவதித் தாய்மார்களுக்கான உலர்உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பூமாரி திருமண மண்டபத்தில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மற்ற மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா மற்றும் தரானா பௌண்டேசன் தலைவி சுரஞ்சி விக்ரமநாயக்க ஆகியோர் உலருணவுப் பொருட்கள் வழங்கினர்.

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரால் பல்வேறுபட்ட சமூக நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 75 கர்ப்பணி தாய்மார்களுக்கு இந்த உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

(அ)

# விகாரையில் கொள்ளை முயற்சி 5 பிக்குகள் உட்பட எழுவர் கைது!

கொழும்பு, ஜன. 29

கதிர்காமம் மலைப்பகுதி ரஜமகா விகாரை தலைமைப் பிக்குவை கொலை செய்து அவரின் உடைமைகளை கொள்ளையிட முயற்சித்த ஐந்து இளம் பிக்குகள் உள்ளிட்ட ஏழு பேரை கதிர்காமம் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிக்குகள் ஐந்து பேரும் அனுராதபுரத்தின் விகாரையொன்றைச் சேர்ந்தவர்களென்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது குறித்து கதிர்காமம் மலைப்பகுதி ரஜமகா விகாரை தலைமைப் பிக்கு ஹல்லே ஞானத்திரதேரரிடம் பொலிஸார் வினவிய போது தன்னைக் கொலை செய்து தனது உடைமைகளைக் கொள்ளையிடவே முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றேன் என்று மட்டும் கூறினார்.

கதிர்காமம் மலைப்பகுதி ரஜமகா விகாரை தலைமைப் பிக்குவின் அறையை உடைத்து உட்புக முயற்சித்தபோதே பாதுகாப்புக் கடமைகளில் இருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்படி ஐந்து இளம் பிக்குகள் உள்ளிட்ட ஏழு பேரையும் கைதுசெய்தனர்.

அத்துடன் இவர்களிடமிருந்த ஆயுதங்களையும் பொலிஸார் மீட்டனர்.

இது தொடர்பாக கதிர்காமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உபுல் லியனகே தலைமையிலான குழுவினர் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் கண்டி மாற்றப்படும்

கொழும்பு, ஜன. 29

பேராதனை தாவரவியல் பூங்காவை உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் முக்கிய இடமாக மாற்றப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று அந்தப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கண்டி நகரத்துக்கு வெளிநாட்டினரை ஈர்க்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு பயணத்திட்டத்தை உருவாக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

# சகல எம்.பிக்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, ஜன. 29

பாராளுமன்றத்தில் எழுமாற்றாக முன்னெடுக்கப்படவுள்ள பி.சி.ஆர். பரிசோதனைகளில் பங்கேற்குமாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியுடன் வாரத்துக்கு ஒரு முறை பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 13 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை பாராளுமன்றில் மேற்கொள்ளப்பட பி.சி.ஆர். பரிசோதனைகளில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு அறிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் நல்லிணக்கம் ஏற்படுவதற்காக செயற்படுவேன்

## யாழ்.கட்டளைத் தளபதி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 29

**மதத் தலைவர்களின் ஆசியோடு யாழ்ப்பாணத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பேன் என யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.**

நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

1985 ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் கடமையாற்றியிருக்கிறேன்.

நான் கடைசியாக 2014, 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கீரிமலை, உடுவில் பகுதிகளில் கடமையாற்றியிருந்தேன். அந்தக் காலப் பகுதியில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பொது மக்களுக்கான வீடுகளை பெற்றுக் கொடுப்பதில் பெரும் பங்காற்றியிருந்தேன்.

அத்தோடு விவசாய மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய பாதீன ஒழிப்பில் நான் முக்கிய பங்காற்றியிருந்தேன்.

அதன் பின்னர் வன்னி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டு பின்னர் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளேன்.

யாழ்.மாவட்டம் தொடர்பாக ஏற்கனவே நான் அறிந்தவன். இங்குள்ள மக்களை நன்கு அறிந்தவன். எனவே இங்குள்ள மதத் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து அவர்களின் கருத்தின் ஊடாக ஒற்றுமையை, நல்லிணக்கத்தை ஏற்படுத்தி மாவட்டத்தில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில் யாழ். மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு என்னாலான பூரண ஒத்துழைப்பை வழங்குவேன்.

அத்தோடு என் கீழ் பணியாற்றும் சகல ராணுவ வீரர்களும் பொதுமக்களின் சகல சமூக செயற்பாட்டுக்கும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் - என்றார்.



# ஔவையார் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, ஜன. 29

வவுனியா சின்னப்புதுக்குளம், மாமடுவ சந்தியிலுள்ள ஔவையார் நினைவுத் தூபியில் அவரது நினைவுதினம் நேற்று காலை அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் நகரசபை உபதலைவர் சு.குமாரசாமி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவுப் பேருரையை ஆசிரியர் உதயகுமார் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான சந்திரகுல சிங்கம் மோகன், ரி.கே,ராஜலிங்கம், சு.காண்டீபன், நா. சேனாதிராசா, சமூக ஆர்வலர்களான சந்திரகுமார் கண்ணன், மாதவன்,விக்னா நகரசபை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# பல்கலைகளுக்கு மேலதிகமாக 10,000 மாணவர்கள் இணைப்பு

கொழும்பு, ஜன. 29


பல்கலைக்கழகங்களில் மேலதிகமாக 10 ஆயிரம் மாணவர்களை இந்த ஆண்டில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை தொடர்பான திட்டம் மீளாய்வு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாணவர்களை உள்வாங்கும் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்படும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# கிரிக்கெட் வளர்ச்சிக்கு அர்ஜுனவின் ஆதரவு கோருகிறார் அமைச்சர் நாமல்





கொழும்பு, ஜன. 29

இலங்கையில் கிரிக்கெட் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குமாறு இலங்கை அணி யின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவிடம் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

மாத்தறையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசியபோதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூரில் கிரிக்கெட்டுக்கு குழுக்களை நியமிப்பது நடைமுறையில் உள்ள பிரச்னைகளுக்கு ஒரு பதிலாக அமை யாது. எனவே நாட்டில் எந்தவொரு விளையாட்டும் அரசியல் மயமாக்கலில்லாமல் இருக்க வேண்டும்.

அர்ஜுன ரணதுங்க ஒரு திறமையான கிரிக்கெட் வீரர் என்பதுடன் ஒரு நல்ல தலைவர். லங்கா பிரீமியர் லீக்கின்போது ஆலோசனை வழங்கினார். ரணதுங்கவின் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

2015 க்கு முன்னர் உலகெங்கிலும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் கொண்டாடப்பட்டனர். ஆனால் அதற்கு பின்னர் அரசியல்மயமாக்கல் காரணமாக கிரிக்கெட் மோசமடைந்துள்ளது- என்றார்.

# மொட்டு மீது மைத்திரி கடுமையான அதிருப்தி!

## சு.கவைப் புறம் தள்ளுவதால் சீற்றம்

கொழும்பு,ஜன.29

**ஆளுங்கூட்டணியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு உரிய கவனிப்பு இல்லை. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரகாரம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன செயற்படவில்லை என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால், தமது கட்சிக்கு அநீதி இழைக்கப்படுவதாக சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவால் முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப்பதிலளிக்கையிலேயே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆம். அப்படியான பிரச்னை இருக்கின்றது. அவர் கூறிய கருத்தில் பிழை இல்லை. எமக்கான கவனிப்பில் குறை உள்ளது. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரகாரம் எதுவும் நடைபெறுவதில்லை. உரிய வகையில் செயற்பட்டிருந்தால் இப்படியான குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

எது எப்படி இருந்தாலும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது பற்றியே அதிகம் கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் தரப்புகளில் இருந்து எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. மற்றுமொரு தரப்பாலேயே பிரச்னைகள் எழுந்துள்ளன-என்றார்.



# நெல் அறுவடையில் பாரியளவு வீழ்ச்சி கொள்வனவிலும் நியாய விலையில்லை

### கிளிநொச்சி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஜன. 29

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெல் அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதோடு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவும் நியாயமற்ற விலையில் மேற்கொள்ளப்படுகிறது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது காலபோக நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் பெரும்பாலான விவசாயிகளுக்கு அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சில விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவைக்கூட பெற்றுக்கொள்ள முடியாதளவில் அறுவடை காணப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை, நோய் என்பனவே இவற்றுக்கு காரணம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு நெல் கொள்வனவில் ஈடுப்படும் தனியார் நிறுவனங்களும் நியாயமற்ற விலையில் கொள்வனவை மேற்கொள்வதாவும், வேறு வழியின்றி விவசாயிகளும் கொள்வனவாளர்களின் விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும் விவசாயிகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மரக்கறி விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 29

மரக்கறிகளின் விலை அதிகரிப்பு, எதிர்வரும் மார்ச் மாதம் முற்பகுதி வரையில் நீடிக்கும் என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆய்வு மற்றும் பயிற்சி மையம் தெரிவித்துள்ளது.

மழையுடனான காலநிலை காரணமாக, பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட பாதிப்பே இதற்கான காரணம் என அந்த மையத்தின் ஆய்வு பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரஞ்சித் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம், தம்புள்ளை பொருளாதார மையத்திற்கு தற்போதைய நாட்களில் கிடைக்கும் மரக்கறிகளின் அளவில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மரக்கறிகளின் விலை அதிகரித்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாத தடைச் சட்டத்தில் உடனடியாக திருத்தம் வேண்டும்

## இலங்கையிடம் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 29

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு, அதனை சர்வதேச தரத்துக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இணைய வழியாக நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை ஆகியன இணைந்த ஆணைக்குழுவின் 23 ஆவது சந்திப்பில் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தகுந்த திருத்தங்களைச் செய்யும் நோக்கில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகளை மீள்பரிசீலனை செய்வதற்கு இலங்கை அரசும் உறுதிப்படுத்தியுள்ளது.

மனித மற்றும் தொழிலாளர் உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும் நல்லாட்சி தொடர்பான ஜி.எஸ்.பி. பிளஸ் திட்டத்தின் கீழ் உள்ள 27 சர்வதேச சாசனங்களைச் திறம்படச் செயற்படுத்தவுள்ளதாகவும் இலங்கையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் சார்ந்த பிரச்னைகளில் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதேநேரம், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானத்தின் இணை அனுசரணையிலிருந்து இலங்கை விலகியிருப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு சமூகங்களிடையே நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் அமைதியான சகவாழ்வை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.




# தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய தனியார்துறைக்கு அனுமதியில்லை

## திட்டவட்டமாக அறிவித்தது அரசு

கொழும்பு, ஜன. 29

இலங்கைக்குக் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை இறக்குமதி செய்யத் தனியார் துறைக்கு அனுமதியில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளைக் கையாளும் ஜனாதிபதியின் குழு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

களஞ்சிய வசதிகள் உள்ள தனியார் துறையினர் கொரோனாத் தடுப்பூசிகளை இறக்குமதி செய்யத் தயாராகி வருகின்ற நிலையிலேயே, இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளைக் கையாளும் பொறுப்பை அரசு கொண்டுள்ள நிலையில், தனியார் துறைக்குத் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய அனுமதிப்பது பாதுகாப்பில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளை இறக்குமதி செய்யத் தனியார் துறை கோரிக்கை விடுத்த போதிலும், இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ அரசு தடை விதித்துள்ளது.

# ஆயிரம் ரூபா சம்பளமும் அஷ்டமத்து சனியும்..!



ஆர்.சனத்

ஏழரை சனியைவிட எட்டாமிட சனியான அஷ்டமத்து சனியே மிகவும் ஆபத்தானது என்கிறது ஜோதிடம். பழி பாவம், வலி - வேதனை, ஏமாற்றம், காரிய தடைகள் போன்ற கெடுபலன்களை அது அள்ளி வழங்குவதால் இன்பம் விலகி - துன்ப மேகங்களே சூழ்ந்துகொள்ளுமாம்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான அடிப்படை நாட் சம்பளம் ஆயிரம் ரூபா விவகாரத்திலும் அஷ்டமத்து சனி பாய்விரித்து படுத்திருப்பதுபோலவே 'தொழிற்சங்க நகர்வுகள்' அமைந்துள்ளன.

குறிப்பாக கூட்டாக களமிறங்கி ஒருமித்த நோக்கோடு - இலக்கை அடைவதற்காக சமராடவேண்டிய தருணத்தில் தொழிற்சங்கங்களோ 'மற்றைய தரப்பு'மீது பழி பாவம் சுமத்தும் தந்திரத்தை கையாண்டு வருகின்றன. தொழிலாளர்களோ வலி - வேதனையாலும், ஏமாற்றத்தாலும் துடிதுடிக்கின்றனர்.

> "கூட்டு ஒப்பந்தத்தில் சம்பளம் மட்டுமல்ல தொழி லாளர்களின் நலன்சார் விடயங்களும் தீர்மானிக்கப் படுகின்றன. இருந்தும் அந்த சரத்துகளை தோட்டக் கம்பனிகள் கடந்த காலங்களில் பின்பற்றவில்லை. இதனால், ஒப்பந்தத்தின் முழுமையான நன்மையை தொழிலாளர்களால் நுகரமுடியாமலுள்ளமை வேத னைக்குரிய விடயமாகும்."

இந்நிலையில் சனியனை எதிர்த்து போராடி - பரிகாரம் செய்தேனும் அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுப்போம் என சூளுரைத்தவர்கள் தற்போது வாலை சுருட்டிக்கொண்டு 'தந்திரோபாய பின்வாங்கலில்' ஈடுபட தயாராகிவருகின்றனர்.

அதுமட்டுமல்ல இன்று கிடைக்கும், நாளை கிடைக்கும்..இல்லை..இல்லை நாளை மறுதினம் கட்டாயம் கிடைக்கும் என்றெல்லாம் பழைய பல்லவியே பாடப்பட்டுவருகின்றது.

தொழிற்சங்கங்களிடம் உறுதியானதொரு சம்பள திட்டம்கூட இல்லை. கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களிடம் புரிந்துணர்வும் இல்லை. மூன்று சங்கங்களும் வெவ்வேறான நிலைப்பாட்டிலேயே உள்ளன. ஆனால் முதலாளிமார்களோ சம்பள திட்டத்தை முன்வைத்து - அதனை முன்னிலைப்படுத்தி பிரசாரம் செய்கின்றனர்.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களிடமும் சம்பள உயர்வுக்கான முன்மொழிவு இல்லை. இவ்வாறு உரிய திட்டம் எதுவும் இல்லாமல், ஆயிரம் ரூபா என்ற கோஷத்தை மாத்திரம் முன்னிலைப்படுத்தி தொழிற்சங்கங்கள் பிரிந்து நின்று - நீயா, நானா என அரசியல் சமரில் ஈடுபடுவதால் கடைசியில் கம்பனிகளுக்கே அது சாதகமாக அமைந்துவிடும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விவகாரத்தில் இம்முறையும் திட்டமிட்ட அடிப்படையில் இழுத்தடிப்பு தொடர்கின்றது. அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்க முடியாது என தோட்டக் கம்பனிகள் திட்டவட்டமாக அறிவித்துவிட்டன.

அரசியல் மற்றும் தொழிற்சங்க பலத்தை பயன்படுத்தி ஆயிரம் ரூபா என்ற இலக்கை அடைவதற்கு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டாலும், கம்பனிகளின் உடும்புப் பிடியை அவற்றால் தகர்க்க முடியவில்லை.

அதேபோல பெருந்தோட்டங்களின் காணி உரிமை தம்வசம் இருந்தும், அவற்றை குத்தகைக்கு எடுத்துள்ள தனியார் கம்பனிகளை கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே அரசாங்கம் உள்ளது. அமைச்சரவையில் தீர்மானங்களை நிறைவேற்றி '1000' கூத்துகள் அரங்கேற்றப்பட்டாலும் தீர்வு உறுதியா என்பது கேள்விக்குறியே.

அமைச்சரவை தீர்மானம் என்பது இறுதி முடிவு அல்ல.இறுதி முடிவை நோக்கி நகர்வதற்கான ஆரம்ப புள்ளியே அது. எனவே, அமைச்சரவை தீர்மானித்துவிட்டது என்ற செய்தியை மட்டும் வைத்துக்கொண்டு அரசுக்கு சார்பாக காவடி தூக்கி அலகு குத்துவது பொருத்தமான நடவடிக்கையாக அமையாது.

அத்துடன் தொழிலாளர்கள் அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா கோரிய நிலையில், ஆயிரம் ரூபாவரை என்ற சொற்பதத்தின் ஊடாக அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைக்காது என்பதனை அரசு உறுதிப் படுத்தி விட்டது.

## கூட்டு ஒப்பந்தம் என்றால் என்ன?

வெள்ளையர்களிடமிருந்து 1972 இல் தேசியமயப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்கள் 1990 காலப்பகுதியில் தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டன. அதன்பின்னரே 1992 முதல் கூட்டு ஒப்பந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

அரச - தனியார் துறையினருக்கான சம்பளமானது சம்பள நிர்ணயச்சபையினூடாகவே நிர்ணயிக்கப்பட்டாலும் - மலையகத் தொழிலாளர்கள் விவகாரத்தில் மேற்படி சபை தலையிடாது. கூட்டு ஒப்பந்தம் ஊடாகவே சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

இதன்படி பெருந்தோட்டக் கம்பனிகளும், தொழிற்சங்கங்களும் பேச்சு நடத்தி பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் சம்பளத்தை தீர்மானிக்கும் முறைமையே கூட்டுஒப்பந்தம் எனப்படுகின்றது.

பொருளாதாரம் - வாழ்க்கைச்செலவு ஆகியவற்றுக்கேற்ப சம்பளம் வழங்கப்படவேண்டும் என்பதாலேயே இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை இவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்படுகின்றது.

கூட்டு ஒப்பந்தத்தில் சம்பளம் மட்டுமல்ல தொழிலாளர்களின் நலன்சார் விடயங்களும் தீர்மானிக்கப் படுகின்றன. இருந்தும் அந்த சரத்துகளை தோட்டக் கம்பனிகள் கடந்த காலங்களில் பின்பற்றவில்லை. இதனால், ஒப்பந்தத்தின் முழுமையான நன்மையை தொழிலாளர்களால் நுகரமுடியாமலுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும்.

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசியத் தோட்டத்தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியன தொழிலாளர்கள் சார்பிலும் சுமார் 23 கம்பனிகள் நிர்வாகத்தின் சார்பிலும் பேச்சுகளில் பங்கேற்கும். இதில் இரு அரச நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன.

## 2013 முதல் 2019வரை 'சம்பள உயர்வு' பேச்சு கடந்துவந்த பாதை

ஆரம்பகாலகட்டத்தில் பெருந்தோட்டத்துறை யில் தொழில் புரியும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறான முறையிலேயே சம்பளம் வழங்கப்பட்டது.காலப்போக்கிலேயே இரு பாலாருக்கும் ஒரு தொகை நிர்ணயிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் 2015 மார்ச் 31 ஆம் திகதியுடன் காலாவதியானது. ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்குரிய பேச்சுகள் முன்கூட்டியே ஆரம்பமாகியிருந்தாலும், பொதுத்தேர்தல் நெருங்கியதால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் ஆயிரம் ரூபா சம்பளம் அவசியமென்ற கோரிக்கை தேர்தல் குண்டாக வீசப்பட்டது.



அதன்பின்னர் ஏனைய தொழிற்சங்கங்களும் ஆயிரம் ரூபாவுக்காக குரல் கொடுத்தன. எனினும், கம்பனிகள் இணங்கவில்லை. அப்போதும் ஆயிரம் ரூபா வழங்குவதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், சம்பள உயர்வை வலியுறுத்திலும் மலையகத்தில் எட்டுத்திக்கலும் வெடித்த தொழிற்சங்க போராட்டங்களுக்கு வடக்கிலும், கிழக்கிலும், தலைநகரிலும் ஏன்! புலம்பெயர் நாடுகளில்வாழும் பாட்டாளி வர்க்கத்தினர் நேசக்கரம் நீட்டினர்.

இவ்வாறு 18 மாதங்களாக போராட்டங்கள் தொடர்ந்ததால் தொழிலாளர்களின் பொருளாதாரமும் ஆட்டம்காண தொடங்கியது. ஆரம்பத்தில் தொடர்,அதன்பின்னர் சுழற்சி முறையென போராட்டவடிவங்கள் உருமாறியதாலும், தொழிலாளர்களின் வறுமையை பயன்படுத்திலும் இறுதியில் ஏனோதானோவென ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

2013 காலப்பகுதியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு, அடிப்படை நாட் சம்பளமாக 450 ரூபா உட்பட நாளாந்த சம்பளமாக 630 ரூபாவை பெற்றனர்.

2016 இல் அடிப்படை நாட்சம்பளமாக 500 ரூபாவும், வரவு ஊக்குவிப்பு கொடுப்பனவாக 60 ரூபாவும், நிலையான கொடுப்பனவாக 30 ரூபாவும் ,உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு கொடுப்பனவாக 140 ரூபாவுமாக நாளொன்றுக்கு 730 ரூபா வழங்கப்பட்டது.

எனினும், 2019 இல் புதிதாக கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் 500 ரூபாவிலிருந்து 700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. விலைக்கேற்ற கொடுப்பனவாக 50 ரூபா வழங்கப்பட்டது. விலைக்கொடுப்பனவு, வரவுக்கான கொடுப்பனவு என்பன நீக்கப்பட்டன. இதன்படி நாளொன்றுக்கான சம்பளமாக 750 ரூபாவை தொழிலாளர்கள் பெற்றனர். கூட்டிக்கழித்து பார்த்தால் ஆயிரம் ரூபாவை எதிர்ப்பார்த்த தொழிலாளர்களுக்கு வெறும் 20 ரூபாவே சம்பள உயர்வாக கிடைத்தது என்பது கசப்பான உண்மையாகும்.

தற்போது அடிப்படை நாட் சம்பளமாக 700 ரூபாவை பெறும் தொழிலாளர்கள் புதிய ஒப்பந்தத்தின் ஊடாக மேலும் 300 ரூபா அதிகரிக்கப்பட்டு ஆயிரம் ரூபாவை அடிப்படை நாட் சம்பளமாக எதிர்ப்பார்க்கின்றனர். இதற்காக 5 வருடங்களுக்கு மேல் காத்திருக்கின்றனர். கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களின் கோரிக்கையும் இதுவாகவே இருக்கின்றது.

இந்நிலையில் 'அடிப்படை' என்ற பதத்தைநீக்கிவிட்டு, தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாட் சம்பளம் (அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி) 2020 மார்ச் முதல் ஆயிரம் ரூபாவாக இருக்கவேண்டும் என 2020 ஜனவரியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்திருந்தார். ஜனாதிபதியின் அறிவிப்பைக்கூட கம்பனிகள் ஏற்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலும் ஆயிரம் ரூபா தொடர்பான யோசனை முன்மொழியப்பட்டுள்ளது. இதனை வழங்க மறுக்கும் கம்பனிகளின் முகாமைத்துவம் மறுசீரமைக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கும் கம்பனிகள் பணிவதாக தெரியவில்லை. தம்மால் முன்வைக்கப்படும் தீர்வு திட்டமே நடைமுறைக்கு வரவேண்டும் என்பதில் முதலாளிமார் சம்மேளனத்தினர் உறுதியாக நிற்கின்றனர். அதாவது அடிப்படை நாட் சம்பளத்தை சொற்பள அளவு உயர்த்துவதற்கே கம்பனிகள் தயாராகவுள்ளன. ■




# யார் பொறுப்புக் கூறுவார்?

**அருட்பணி செ. அன்புராசா**

**க**டந்த 26ஆம் திகதி மாலை வாகனத்தில் கிளிநொச்சி ஜெயந்திநகரின் ஊடாக ஒரு கொங்கிறீற் பாதையால் போய்கொண்டிருந்தபோது திடீரென அப்பாதையைக் காணவில்லை.

ஆச்சரியப்படுவீர்கள் ஆனால் உண்மை!

வாகனத்தின் வேகத்தை உடனடியாகக் குறைத்து அதை நிறுத்திக் கொண்டேன். உண்மையாகவே பாதையைக் காணவில்லைத்தான்!

மார்கழி மாதம் பெய்த மழையில் பாலத்துடன் பாதையும் அள்ளுண்டுபோய் கிடக்கின்றது. இப்போது அவ்விடத்தில் பாலமும் இல்லை. பாதையும் இல்லை.

யார் செய்த புண்ணியமோ வாகனத்தை நிறுத்திக்கொண்டதால் தப்பித்துக்கொண்டேன்.

இல்லையென்றால் ‘அமைதியில் இளைப்பாறுவாராக’ என்று ஒரு போஸ்றை இரு வார்த்தைகளில் அநேகமாக போடவேண்டி வந்திருக்கும்.

அது ஒருபுறமிருக்க, இப்பாதை தண்ணீரில் அள்ளுண்டுபோய்க் கிடக்கின்றது. இந்நிலையில், இப்பாதையால் பயணம் செய்ய முடியாது என்றோ பாதை பழுதடைந்து கிடக்கிறது என்றோ பாதையால் பயணம் செய்யாமல் தடை ஏற்படுத்தப்படவோ இல்லை.

சிலவேளைகளில் அப்படித் தற்காலிகத் தடைகளை ஏற்கனவே சிறிதளவிலேனும் ஏற்படுத்தி இருந்தாலும், இப்போது அவ்வாறான ஒரு நிலையைக் குறித்துக் காட்ட அவ்விடத்தில் ஒரு துரும்பும் இல்லை. இவ்வூரைச் சாராத ஒருவர் இரவு வேளையில் இப்பாதையால் செல்ல நேர்ந்தால் நிலைமை?

இதற்கு, யார் பொறுப்பு?

இதனை யாரிடம் கேட்பது?

இதற்கு யாரேனும் பொறுப்புக் கூறுவார்களா?

இதற்கு யாரும் பொறுப்புக்கூறத் தேவையில்லையா?

இந்நிலையைப் பார்த்து ஆவன செய்ய இம்மாவட்டத்தில் அரச உயர் அதிகாரிகளோ, இந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளோ, பிரதேச சபையோ, இப்பகுதி பொலிஸ் அதிகாரிகளோ, வீதிகளுக்குப் பொறுப்பான பொறியியலாளர்களோ, கிராம மட்டத்து அமைப்புக்களோ இல்லையா?

இதுதான் பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமையுணர்வா?

யாராவது இவ்வீதியில் பயணித்து இப்பாலத்திற்குள் விழுந்து இறந்துபோனால் மேற்சொன்ன அத்தனை தரப்பினரும் அநேகமாக அனுதாபம் தெரிவிக்க நிச்சயமாக வருவார்கள். இதுதான் எம் நிலத்தின் இன்றைய நிலைமையா?

ஏதோ இயலுமான தடையை ஏற்படுத்தி வழியை மறித்து விட்டிருக்கின்றேன். அத்தோடு இதற்குள் விழுந்து யாரும் அநியாயமாகச் சாகாதிருக்க ஒரு சிறு வேண்டுதலையும் செய்துவிட்டு வந்திருக்கின்றேன்.

# கொரோனா தடுப்பு மருந்து எப்படி ஏழை நாடுகளுக்குப் பகிரப்படும்?




**கொ**ரோனா தடுப்பூசி அதிவிரைவாக கண்டுபிடிக்கப்பட்டது எல்லாம் அறிவியல் வளர்ச்சியின் உச்சம்.

ஆனால் கொரோனா தடுப்பு மருந்துகளை பணக்கார நாடுகள் பதுக்கி வைத்துக் கொள்வதற்கு வாய்ப்பிருப்பதாக ஒரு பயம் நிலவுகிறது. அதற்கு ஏழை நாடுகள் விலை கொடுக்க வேண்டி இருக்கும்.

இந்த பிரச்சனையைத் தீர்க்கும் விதத்தில் ‘கோவேக்ஸ்’ (covax) என்றழைக்கப்படும் ஒரு சர்வதேசத் திட்டம் இருக்கிறது. ஏழை பணக்கார பாகுபாடுகளின்றி, எல்லா நாடுகளுக்கும் நியாயமாக கொரோனா தடுப்பு மருந்து வழங்கப்பட வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் நோக்கம்.

### கோவேக்ஸ் திட்டம் என்றால் என்ன?

இந்த கோவேக்ஸ் திட்டம் கடந்த ஏப்ரல் 2020 இல் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தை உலக சுகாதார அமைப்பு மற்றும் இரண்டு தடுப்பூசி ஆதரவுக் குழுக்கள் முன்னெடுத்து நடத்தி வருகின்றன.

இவ்வமைப்பு கொரோனா வைரஸுக்கான தடுப்பூசியை மேம்படுத்துவது, வாங்குவது, 180-க்கு மேற்பட்ட நாடுகளுக்கு தடுப்பூசியை விநியோகிப்பது போன்ற பணிகளைச் செய்து வருகிறது.

“49 பணக்கார நாடுகளில் 3.9 கோடிக்கும் அதிகமான கொரோனா தடுப்பு மருந்து டோஸ்களை வழங்கி இருக்கிறார்கள். ஆனால் ஒரு ஏழை நாட்டில் வெறும் 25 டோஸ் தடுப்பூசிகள் மட்டுமே செலுத்தப்பட்டிருக்கின்றன” என உலக அளவில் நிலவும் சமத்துவமின்மையைக் குறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனோம் கெப்ரியேசஸ் குறிப்பிட்டுள்ளார்.

### எவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்கிறது?

வரும் பெப்ரவரி 2020 முதல் கோவேக்ஸ் திட்டத்தின் கீழ் கொரோனா தடுப்பூசிகளை விநியோகிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏழை மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் இதில் பெரும்பகுதி மருந்தைப் பெறுவார்கள்.

இந்த 2021ஆம் ஆண்டின் இறுதிக்குள், உலக நாடுகளுக்கு 200 கோடிக்கும் அதிகமான தடுப்பூசி டோஸ்கள் வழங்கப்படும் என நம்புகிறது கோவேக்ஸ்.

இந்த 200 கோடி டோஸ் மருந்தில், சுமாராக 130 கோடி டோஸ் மருந்து, கோவேக்ஸ் திட்டத்தில் இணைந்திருக்கும் 92 ஏழை நாடுகளுக்கு வழங்கப்படும். இதனால் அந்த 92 நாடுகளில் வாழும் மக்களில் 20 சதவீதத்தினருக்கு கொரோனா தடுப்பூசி வழங்க முடியும்.

இதெல்லாம் ஒரு பக்கமிருக்க, கோவேக்ஸ் திட்டம் விரைவாகச் செயல்படவில்லை என்கிற விமர்சனமும் வைக்கப்படுகிறது.

“கோவேக்ஸ் திட்டம் கொரோனா தடுப்பு மருந்துகளைப் பெறுவதிலும், அதை நாடுகளுக்கு விநியோகிப்பதிலும் வேகமாகச் செயல்படவில்லை” என உலக சுகாதார அமைப்பில் உறுப்பினராக இருக்கும் ஆஸ்ட்ரியா நாட்டின் மருத்துவர் கிளெமென்ஸ் மார்டின் ஆர் விமர்சித்திருக்கிறார்.

### கோவேக்ஸ் கொரோனா பெருந்தொற்றை ஒரு முடிவுக்குக் கொண்டு வர உதவுமா?

கொரோனா தொற்றை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமானால் உலகின் 70 சதவீத மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

ஆண்டுக்கு 200 கோடி டோஸ் கொரோனா தடுப்பு மருந்து என்றால், 780 கோடி மக்கள் தொகையில் 70 சதவீதம் பேருக்கு தடுப்பூசி வழங்க ஆண்டுக் கணக்கில் கால அவகாசம் தேவை.

இருப்பினும் 200 கோடி டோஸ் தடுப்பு மருந்து என்பது சுகாதாரப் பணியாளர்கள், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் கொரோனாவால் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாக இருக்கும்.

### எந்த நாடு எவ்வளவு நன்கொடை வழங்கியிருக்கிறது?

பிரிட்டன் அரசு 734 மில்லியன் டொலரை நன்கொடையாகக் கொடுத்திருக்கிறது. இருப்பதிலேயே அதிகம் நன்கொடை கொடுத்த நாடு என்கிற பெயரையும் பெற்றிருக்கிறது.

ரஷ்யா மற்றும் அமெரிக்கா இதுவரை எந்த நன்கொடையையும் வழங்கவில்லை. அமெரிக்க அதிபர் பைடனின் நிர்வாகம் நன்கொடை வழங்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

கோவேக்ஸ் திட்டத்திலிருக்கும் அமெரிக்கா போன்ற சில பணக்கார நாடுகள், தங்களின் சொந்த பயன்பாட்டுக்காக கொரோனா தடுப்பூசியைப் பதுக்குவதாகக் குற்றச்சாட்டப்படுகின்றன.

2021 ஜனவரி மத்தி வரையிலான காலத்தில், உலகின் 60 சதவீத தடுப்பூசி விநியோகத்தை, உலகில் வெறும் 16 சதவீதம் மக்கள் தொகை கொண்ட பணக்கார நாடுகள் வாங்கி இருப்பதாக டியூக் பல்கலைக்கழகத்தின் குளோபல் ஹெல்த் இன்ஸ்டிட்யூட் மேற்கொண்ட ஆராய்ச்சியில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மற்ற நாடுகளுக்கு, குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட ஏழை நாடுகளுக்கு கோவேக்ஸ் திட்டம் மட்டுமே கொரோனா பிரச்சனையில் இருந்து மீள்வதற்கான ஒரே வழி. இதுவரை, கோவேக்ஸ் திட்டம் 2.4 பில்லியன் அமெரிக்க டாலரைத் திரட்டியுள்ளது. ஆனால் 2021-ம் ஆண்டில் தன் இழக்கை அடைய குறைந்தபட்சமாக 4.6 பில்லியன் டாலர் கூடுதலாகத் தேவை எனக் கூறியுள்ளது கோவேக்ஸ் திட்டம்.

### கோவேக்ஸ் மேற்கொண்ட தடுப்பூசி ஒப்பந்தங்கள் என்ன?

பைசர் பயோ என்ரெக் மற்றும் ஒக்ஸ்போர்ட் - ஆஸ்ட்ரா செனீகா, வேறு சில அனுமதி வழங்கப்படாத கொரோனா தடுப்பூசிகளை வாங்கிக் கொள்ள சில ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருப்பதாகக் கோவேக்ஸ் கூறுகிறது.

பைசர் பயோஎன்ரெக் நிறுவனத்தின் 40 மில்லியன் டோஸ் கொரோனா தடுப்பூசிகளை வாங்கிக் கொள்ளும் ஒப்பந்தம் கடந்த வாரம் கையெழுத்தானது. இந்த நிறுவனத்தின் தடுப்பு மருந்து உலக சுகாதார அமைப்பின் நெறிமுறையாளர்களால் அனுமதிக்கப் பட்டிருக்கிறது.

### ஏன் கோவேக்ஸ் அவசியம்?

இந்தக் கொரோனா பெரும்தொற்று பலரின் வாழ்வாதாரத்தை அழித்திருக்கிறது, நாடுகளை முழுமையாக முடக்கியிருக்கிறது, சுமாராக 21 லட்சம் பேர் இந்த நோயால் இறந்திருக்கிறார்கள்.

உலக மக்கள் தொகையில் பெரும்பாலானவர்கள் கொரோனாவுக்கு எதிராக பாதுகாக்கப்படாமல், மீண்டும் வாழ்கை பழைய நிலைக்கு வருவது சிரமமே.

கொரோனா வைரஸுக்கு தடுப்பு மருந்துகள் மட்டுமே தீர்வு என்கிறார்கள் சுகாதார நிபுணர்கள். ஆனால் தடுப்பூசிகள் மற்ற நாடுகளோடும் பகிரப்பட வேண்டும். அப்போது தான் கொரோனா பெரும்தொற்றை ஒரு முடிவுக்குக் கொண்டு வர முடியும்.

# நாட்டில் இனவாதத்தை துண்டும் அரசியல் தொடர்ந்தால் ஆபத்து



## கரு ஜயசூரிய எச்சரிக்கை

கொழும்பு,ஜன.29

**நாட்டில் மனித உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பில் மிகப்பெரிய கேள்வி எழுந்துள்ளது. ஒரு தனி நபருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரத்தை கொடுத்து இந்த நாட்டு மக்கள் அனைவரதும் உரிமையை ஒரு நபர் தீர்மானிக்கும் நிலை உருவாக்கியுள்ளது என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.**

புதிய அரசமைப்பை உருவாக்கி தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும். இதே வேளை இனவாதத்தை தூண்டி அரசியலை முன்னெடுக்கும் தற்போதைய அரசியல் பயணம் தொடருமாயின் எதிர்காலத்தில் மிகப்பெரிய பிரச்னைகள் நாட்டினுள் உருவாகும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

தற்போதைய நிலைமைகள், அரசியல் செயல்பாடுகள் மற்றும் புதிய அரசமைப்பின் தேவைப்பாடு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போது நாட்டில் உருவாக்கப்பட்டு வருகின்ற இனவாத அரசியல் கலாசாரம் இலங்கையை நீண்ட காலத்துக்கு நெருக்கடிக்குள் தள்ளப் போகின்றது. இந்த விடயத்தில் அனைவரும் குறுகிய நோக்கத்தில் பார்க்கின்றனர். ஆனால் தூரநோக்கு சிந்தனையுடன் இந்த நாட்டின் இன மத உரிமைகளை பலப்படுத்தும், பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இப்போது பயணிக்கும் இந்தப் பயணம் எதிர்காலத்தில் மிகப்பெரிய பிரச்னைகளை நாட்டுக்குள் உருவாக்கப் போகின்றது. அவ்வாறு எதுவும் நடந்துவிடக்கூடாது என நான் பிரார்த்திக்கிறேன். மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சமூகத்திலே மக்கள் வாழ வேண்டும். ஒருவரது அடிப்படை உரிமையை தடுக்கும் உரிமை எவருக்கும் வழங்க முடியாது. ஆனால் இன்று மக்களின் அடிப்படை உரிமைகளை தடுக்கும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தகவல் அறியும் சட்டத்தையும் மீண்டும் தடைசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரிய வருகின்றது. இதுகூட மக்களின் அடிப்படை உரிமையை பறிக்கும் செயல்பாடாகவே நான் கருதுகின்றேன். 20 ஆம் திருத்தத்தின் பிரதிபலிப்பே இவையாகும். நாம் ஒருபோதும் 20 ஆம் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு தனி நபருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரத்தை கொடுத்து இந்த நாட்டு மக்கள் அனைவரதும் உரிமையை ஒரு நபர் தீர்மானிக்கும் செயல்பாடே இடம்பெற்றுள்ளது. இவ்வாறு அதிகாரம் பொருந்திய ஜனாதிபதி ஒருவர் உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்றே நினைக்கின்றேன்.

எனவே புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த அரசியல் அமைப்பில் ஜனநாயகம், மனித உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்பட வேண்டும். 20 ஆம் திருத்தத்தை கொண்டுவந்து அதன் மூலம் பறிக்கப்பட்ட உரிமைகள் முழுமையாக புதிய அரசியல் அமைப்பில் பாதுகாக்கப்பட வேண்டும். இதனை வென்றெடுக்கும் பொறுப்பு சிவில் அமைப்புக்களை சார்ந்தது. அடுத்த தேர்தலில் பின்னர் மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்றால் சுயாதீன ஆணைக்குழுக்கள் தேவைப்படும். அதனை வலியுறுத்த சிவில் சமூகங்களின் முழுமையான ஆதரவு தேவைப்படும். இப்போது நான் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன், எனவே புதிய அரசாங்கத்தை உருவாக்கவோ, ஆட்சியை கவிழ்க்கவோ முயற்சிக்கவில்லை. மாறாக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க போராடுகின்றேன். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதில் தமிழர், முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி தூய்மையான நாட்டை உருவாக்க வேண்டும். அதில் சிங்கள மக்களுடன் இணைந்து வாழும் சூழல் உருவாகும்.

இந்த நாட்டின் ஊடகச் சுதந்திரத்துக்கான நீண்டகாலப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருந்தது, 2014 ஆம் ஆண்டுகாலங்களில் எமது ஊடகவியலாளர்கள் பட்ட துன்பங்கள், அதுவரை காலமாக ஊடகவியலாளர்கள் பட்ட துன்பங்கள் நினைவில் உள்ளது. அவர்களுக்காக நாம் துணைநின்று அவர்களுக்காக போராடினோம். இன்று மீண்டும் அதே கலாசாரம் உருவாகிக்கொண்டுள்ளது. அதே போல் ஊடகங்களும் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கிக்கொண்டு மிக மோசமான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. கள்வர்களைப் புனிதர்கள் போன்று போற்றும் நிலைமையும் உருவாகியுள்ளது. இவற்றையும் நிராகரிக்கப் போராட வேண்டியுள்ளது - என்றார். (எ)



# கிழக்கு முனைய சர்ச்சைக்கு அடுத்த வாரம் இறுதித் தீர்வு

## அரசை பலவீனப்படுத்த முடியாது என்கிறார் அமைச்சர் லொக்குகே

கொழும்பு,ஜன.29

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் துறைமுகத் தொழிற்சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கிழக்கு முனைய விவகாரத்தில் அடுத்த வாரம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நாட்டு நிறுவனத்துக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை. அனைத்துச் செயல்பாடுகளும் ஆரம்பத்திலிருந்து பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய வளங்களை விற்கும் கொள்கை அரசாங்கத்துக்குக் கிடையாது என ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் முத்தரப்பு பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை பிற நாடுகளின் ஆதரவின்றி அபிவிருத்தி செய்ய முடியும் என யோசனை முன்வைத்துள்ளார்கள். தொழிற்சங்கத்தினரது யோசனைகள் பரிசீலனை செய்யப்படும். அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாலோசித்து அடுத்த வாரம் கிழக்கு முனையம் விவகாரம் நிறைவு பெறும்.

வாகன நெரிசலை குறைப்பதற்கு விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. அவை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். பிரதான வீதிகளை அகலப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொதுப்போக்குவரத்து சேவையில் நவீனமயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சாதனங்களை இணைத்துக்குக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் நோக்கங்களைக் கொண்டு எதிர்த்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களால் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது. நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றும் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்கின்றோம். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தை கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது - என்றார். (எ)

# சுதந்திர சதுக்கத்தை சுற்றி போக்குவரத்துக்குத் தடை

கொழும்பு,ஜன.29

நாளை 30 ஆம் திகதி முதல் பெப்ரவரி 4 ஆம் திகதி வரை சுதந்திர சதுக்கத்தை சுற்றியுள்ள பகுதிகளில் வாகனப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுதந்திர தினத்துக்கான ஒத்திகை இந்தக் காலப்பகுதியில் நடைபெறவுள்ளமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

இதனால் சுதந்திர சதுக்கத்தை அண்மித்த வீதிகள் மற்றும் இணைக்கும் வீதிகளில்



போக்குவரத்து நடவடிக்கை தடைசெய்யப்படும்.

ஒத்திகை நாள்களில் காலை 6 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரையும் சுதந்திர தினத்தன்று அதிகாலை 4 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரையும் இவ்வாறு போக்குவரத்து தடைசெய்யப்படும்.

இதேவேளை இந்த நாள்களில் தாமரைத் தடாகத்துக்கு அருகே வீதியின் ஒரு பகுதியும் மூடப்படவுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் மாற்று வீதிகளைப் பயன்படுத் துமாறு பொதுமக்களிடம் கோரப்பட்டுள்ளது - என்றார். (எ)

# அரசாங்கத்துக்கு எதிராக துறைமுகத்தில் போராட்டம்

கொழும்பு,ஜன.29

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குக் கொடுப்பதற்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்திவரும் துறைமுக தொழில்சங்கங்கள், கிழக்கு முனையத்தை முழுமையாகத் துறைமுக அதிகார சபையின் கீழ் கொண்டுவரும் போராட்டத்தை இன்று வெள்ளிக்கிழமை கொழும்புத் துறைமுகத்துக்குள் இருந்தே ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளனர். அரசாங்கத்துடன் இனிப் பேச்சுக்களை முன்னெடுப்பதில்லை என்பதையும் அவர்கள் தெளிவாக அறிவித்துள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளின் முதலீட்டுடன் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து துறைமுக தொழிற்சங்கங்கள் போராடி வருகின்றன.

இந்நிலையில் துறைமுக விவகாரத்தை கையாள ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உபகுழுவின் இறுதித் தீர்மானத்தை அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளதுடன், தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை முழுமையாக நிராகரிப்பதாகவும், இனிமேல் பேச்சுக்களை முன்னெடுக்கப்போவதில்லை எனவும் தெரிவித்துவிட்டனர்.

இதனையடுத்து கடந்த 26 ஆம் திகதியும் நேற்று முன்தினமும் துறைமுக தொழிற்சங்கங்கள் தமக்குள் பேச்சுக்களை முன்னெடுத்திருந்த நிலையில் அரசாங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் துறைமுக அதிகார சபையின் ஒருசில அதிகாரிகள், துறைமுகத்தின் வணிக செயல்பாடுகளில் ஈடுபடும் தேசிய நிறுவனங்கள் ஆகியவற்றைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு 23 தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து துறைமுகத்துக்குள் பெரும் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதுடன், எதிர்வரும் திங்கள்கிழமை தொடக்கம் நாடளாவிய ரீதியில் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளதாகவும் தொழிற்சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (எ)

# கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தல் பொலிஸாரின் தடைக்கு மத்தியிலும் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு,ஜன.29

**மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. பொலிஸார் தடைகள் ஏற்படுத்த முற்பட்டபோதும் நினைவேந்தல் நிகழ்வு அமைதியான முறையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மகிழடித்தீவு கொக்கட்டிச்சோலை நினைவுத்தூபி அருகே இடம்பெற்றது.**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பட்டிருப்புக் கிளைத் தலைவருமான பா.அரியநேத்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி. சரவணபவன், கிழக்கு மாகாண சபை முன்னாள் பிரதி அவைத் தலைவர் பிரசன்ன இந்திரகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது நினைவுத்தூபியில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உயிர் நீர்த்தவர்களின் ஆத்மா சாந்தி வேண்டி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி இடம்பெற்ற இறால் வளர்ப்பு பண்ணைப் படுகொலையும் 1992 ஜூன்12ஆம் திகதி இடம்பெற்ற மகிழடித்தீவு படுகொலையும் சேர்த்து சுமார் 239 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களை நினைவு கூரும் நோக்கில் ‘கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவுத்தூபி 2000 ஆம் ஆண்டு மகிழடித்தீவு சந்தியில் அமைக்கப்பட்டது.

(எ)





# கொரோனாவை திறம்படக் கையாண்ட நாடுகளில் இலங்கை 10 ஆவது இடம்

கொழும்பு,ஜன.29

கொரோனா வைரஸ் தொற்றை மிகவும் திறம் படக் கையாள்வது தொடர்பில் அவுஸ்திரேலிய சிந்தனைக் குழுவான லோவி இன்ஸ்டியூட்டின் (Lowy Institute) புதிய பகுப்பாய்வில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது.

இந்தப் பட்டியலில் நியூஸிலாந்து முதல் இடத்தைப் பிடித்துள்ளதுடன், வியட்நாம், தாய்வான் மற்றும் தாய்லாந்து ஆகியவை முறையே இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களைப் பிடித்துள்ளன. மேலும் அவுஸ்திரேலியா எட்டாம் இடத்தில் உள்ளது.

லோவி இன்ஸ்டியூட் சுமார் 100 நாடுகளில் கொரோனா வைரஸ் நிலைமைகளைக் கருத்தில் கொண்டே இந்தத் தரவை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் கொரோனா நோயாளர்களது எண்ணிக்கையை உறுதிப்படுத்தப்பட்ட இறப்புகள் மற்றும் சோதனை விகிதங் களையும் ஆராய்ச்சியாளர்கள் கண்காணித்தனர்.

கொரொனா தொற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்கா 94ஆவது இடத்திலும், இந்தோனேஷியாவும் இந்தியாவும் முறையே 85 மற்றும் 86 ஆவது இடங்களையும் பிடித்துள்ளன.

(எ)

# தனிமைப்படுத்தலை மீறிய 2,808 பேர் இதுவரை கைது

கொழும்பு,ஜன.29

நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டுக்களின் பேரில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 2,808 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்- என்றார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(எ)

# நேற்று முதல் நாடு முழுவதும் விசேட போக்குவரத்துத் திட்டம்

கொழும்பு,ஜன.29

நேற்று முதல் நாடு முழுவதும் விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளுக்கு அமைய ஆட்களை வாகனங்களில் ஏற்றிச்செல்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வீதிப்போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர், அதிக வேகமாக வாகனங்களைச் செலுத்துவோர், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவோர் கைது செய்யப்படுவார்கள். இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கொரோனா சுகாதார விதிமுறைகளை மீறும் வகையில் ஆசனங்களின் எண்ணிக்கையை விட கூடுதலான பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

(எ)




# சர்வதேச அமைப்புக்களின் தேவைக்காக பிரதமர் மஹிந்த செயல்படவில்லையாம்

## மேர்வின் சில்வா கூறுகிறார்



கொழும்பு,ஜன.29

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஐக்கிய நாடுகள் சபை ஆகிய சர்வதேச அமைப்புக்களின் தேவைக்கு ஏற்ப பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செயல்படவில்லை. தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவ்வாறே செயல்படுகிறார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் உள்ளக மட்டத்திலான தீர்மானங்களுக்கு முன்னுரிமை வழங்கிச் செயல்பட வேண்டும்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்ய முடியும் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. அவ்வாறாயின் உடல்களை அங்கு கொண்டு சென்று புதைத்துக் கொள்ளலாம் இங்கு முடியாது. சுகாதாரத் தரப்பின் தீர்மானங்களுக்கு அமையவே அரசாங்கம் செயல்படுவது கட்டாயமாகும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்க வேண்டாம் என மகாநாயக்க தேரர்கள் குறிப்பிடும் கருத்துக்கு மதிப்பளியுங்கள். தேசிய வளத்தை பாதுகாக்க அனைத்து இன மக்களும் ஒன்றிணைய வேண்டும். நாட்டுக்காக வீதியில் இறங்கிப் போராடவும் தயாராகவுள்ளோம்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனத்தினர் குறிப்பிடுவார்களாயின் இறப்பவர்களின் உடல்களை விமானம் மூலம் கொண்டு சென்று அங்கு புதைத்துக் கொள்ளலாம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் மகாநாயக்க தேரர்களின் கருத்துக்கு மதிப்பளித்து சுயாதீனமாகச் செயல்படும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை, ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செயல்படவில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செயல்படமாட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தேசிய வளங்களை விற்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றமை தவறு. தற்போதைய எதிர்க்கட்சியினர் அப்போது அதனை எதிர்க்கவில்லை. பொதுஜன பெரமுன கடந்த அரசாங்கத்தில் எதிர்க்கட்சியாகச் செயல்பட்ட வேளை அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பாதுகாக்க முறையாகச் செயல்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி பலம் பெற்ற கட்சியாக எழுச்சி பெறும். தற்போது கட்சியில் தவறான நோக்கங்களைக் கொண்டவர்கள் உள்ளனர். கட்சி தூய்மைப்படுத்தப்பட்டு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும். எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவே செயல்படுவேன்- என்றார். (எ)

# கனடாவில் தமிழின அழிப்பு நினைவுத் தூபியே அமையும்!

ஒன்ராறியோ, ஜன. 29

**கனடா - பிரம்ரன் நகரில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைக்கப்பட வேண்டும் எனக் கடந்த வாரம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில், அமையவுள்ள முள்ளி வாய்க்கால் நினைவுத் தூபி என்பதற்கு பதிலான ‘தமிழ் இனவழிப்பு நினைவுத் தூபி’ எனப் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது.**

இது தொடர்பில் கனடியத் தமிழர் தேசிய அவை விடுத்த வேண்டுகோள் ஏற்கப்பட்டு, ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருந்த தீர்மானத்தில் நேற்றுமுன்தினம் திருத்தம் செய்யப்பட்டது.

இனப்படுகொலைக்கு உள்ளான தமிழ் மக்களுக்காக கனடா - பிரம்ரனில் ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்பட வேண்டும் என பிரம்டன் நகர சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் கடந்த வாரம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிரம்ரன் நகரசபையின் 3, 4ஆம் வட்டார உறுப்பினர் மார்ட்டின் மடிரோஸ் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் நினைவாக பிரம்ரனில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை சபையில் முன்வைத்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டதும் இந்தத் தீர்மானத்துக்கான காரணங்களுள் ஒன்று என்று என நகர சபை உறுப்பினர் மார்ட்டின் மடிரோஸ் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானம் நகரசபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிலையிலேயே அமையவுள்ள தூபிக்கு முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி என்பதற்கு பதிலான ‘தமிழ் இனவழிப்பு நினைவுத்தூபி’ எனப் பெயர் மாற்றப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. (ஐ)



2020 ஆம் ஆண்டின் சிறந்த கட்டடக்கலையின் ஒளிப்படப் போட்டியை ‘சார்ட்டர்ட் இன்ரிரியூட் ஒவ் பில்டிங்’ நிறுவனம் நடத்தியது. இதில் தெரிவான ஈரானின் ஜம்கரன் பள்ளிவாசலின் தோற்றமே இது...

# உலகின் மிகவும் ஆபத்தான மெராக் எரிமலை வெடித்தது!

ஜகார்த்தா, ஜன. 29



உலகில் மிகவும் ஆபத்தான எரிமலைகளில் ஒன்றான இந்தோனேசியாவின் மெராபி எரிமலை வெடிக்கத் தொடங்கியுள்ளது.

மத்திய ஜாவா மாகாணத்தில் 9,721 அடி உயரம் உள்ள மெராபி எரிமலை வெடித்துச் சாம்பலை உமிழ்ந்து வருகிறது.

எரிமலை வெடிப்பால், அதனை சுற்றியுள்ள கிராமங்களில் கடும் வெப்பம் நிலவி வரும் சூழலில், அப்பகுதி அருகே வீதிகளில் செல்லும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு இந்தோனேசியாவின் எரிமலை மற் றும் புவியியல் அபாய எச்சரிக்கை மையத்தின் தலைவரான கஸ்பானி அறிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் வெளியாகிய புகைப்படங்களில் எரிமலையில் இருந்து வெளியேறிய சாம்பல்கள் அருகிலுள்ள வீடுகளை மூடிப் படிந்துள்ளதைக் காண முடிகிறது.

இதேவேளை, இந்த எரிமலை வெடிப்பால் மனிதர்களுக்கு சேதங்கள் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. ஆனால், எரிமலை வெடித்துள்ள பகுதியில் இருந்து மக்கள் பலர் தாங்களாகவே வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். 2010 இல் மெராபி எரிமலை வெடித்து மிக மோசமாக எரி மலைக் குழம்புகளைக் கக்கியதில் 350இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ட்ரம்பின் யூரியூப் சனல் நிரந்தரமாக முடக்கம்!

வாஷிங்டன், ஜன. 29

கூகுள் நிறுவனத்தின் காணொலி தளமான யூ ரியூப் டிரம்பின் சனலை முடக்கி உள்ளது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் ருவிட்டர் கணக்கும் முன்னதாக நிரந்தரமாக முடக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பைடனின் வெற்றியை அங்கீகரிக்கும் நிகழ்வில் பாராளுமன்றுக்குள் புகுந்த ட்ரம்ப் ஆதரவாளர்கள் பெரும் வன்முறையில் ஈடுபட்டனர். இதை அப்போதைய ஜனாதிபதி ட்ரம்பே தூண்டினார் என்று பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இதைத் தொடர்ந்து, ட்ரம்பின் யூரியூப் சனல், ருவிட்டர் பக்கங்கள் தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் முடக்கப்பட்டன. இந்நிலையில், சர்ச்சைக்குரிய காணொலிகளை ட்ரம்ப் தொடர்ந்து பதிவிட்டார். இதற்குக் கடும் எதிர்ப்புக்கள் கிளம்பின. இதைத் தொடர்ந்து அவரின் யூ-ரியூப் சனல் நிரந்தரமாக முடக்கப்பட்டது. (ஐ)



# பாகிஸ்தானில் பறக்கும் தட்டு?

கராச்சி, ஜன. 29

பாகிஸ்தான் வானில் பறக்கும் தட்டு ஒன்று திடீரென தோன்றியதாகவும் அதனை விமானி ஒருவர் காணொலியாக எடுத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

கராச்சி நகரில் இருந்து லாகூர் நோக்கி எயார் பஸ் ஏ-320 என்ற விமானம் பறந்து கொண்டிருந்தது. அந்த விமானம் ரகீம்யார் கான் என்ற இடத்தில் பறந்தபோது அடையாளம் காணமுடியாத பொருள் ஒன்று திடீரென தோன்றியுள்ளது.

இதை, அவதானித்த விமானி அதனை காணொலியாகப் பதிவு செய்துள்ளார். அத்துடன் விமானக் கட்டுப்பாட்டு அறைக்கும் அறிவித்துள்ளார்.

அந்தப் பொருள் சூரிய ஒளி போன்று பிரகாசமாக இருந்தது என்றும் பகல் பொழுதில் இது போன்ற அதிக பிரகாசம் கொண்ட பொருள் ஒன்றைக் காண்பது மிக அரிது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ரகீம்யார் கான் பகுதியின் மக்களும் பறக்கும் தட்டு என்று கூறப்படும் அந்தப் பொருளை கண்டறிந்துள்ளனர்.

எனினும், இதுபற்றி பாகிஸ்தான் சர்வதேச எயார்லைன்ஸ் நிறுவன செய்தி தொடர்பு அதிகாரி ஒருவர் கூறும் பொழுது, “அது பறக்கும் தட்டா அல்லது வேறு எதுவும் இருக்கிறதா? என உறுதியாக கூற முடியாது. அந்த பொருள் என்ன என்பது பற்றி உடனடியாக எதுவும் கூறிவிட முடியாது. உண்மையில், அந்த பொருள் என்ன என்று எங்க ளுக்கு தெரியவில்லை. எனினும் வானில் ஏதோவொன்று தென்பட்டு உள்ளது. அதுபற்றி விதிமுறைகளின்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது”, என்றார். (ஐ)

# சீனா சென்ற நிபுணர்கள் குழு விசாரணையை ஆரம்பித்தது



பீஜிங், ஜன. 29

சீனா வந்துள்ள 13 பேரடங்கிய உலக சுகாதார அமைப்பு நிபுணர் குழுவினருக்கான தனிமைப்படுத்தல் நேற்றுடன் முடிவடைந்தது. இதையடுத்து கொரோனா வைரஸ் தோற்றம் மற்றும் பரவல் குறித்து இக்குழுவினரின் ஆராய்ச்சிகள் உடனடியாக ஆரம்பமாகின்றன.

வுஹான் நகருக்குச் செல்லும் இந்தக் குழுவினர் அங்கு கொரோனா வைரஸ் தோற்றம் பெற்ற வுஹான் விலங்குணவு சந்தை, ஆராய்ச்சி நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

அத்துடன், வுஹானில் கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சீன விஞ்ஞானிகள் உள்ளிட்ட தரப்பினருடன் பேசி அவர்களின் தகவல்களையும் பெறவுள்ளனர்.

சீன அதிகாரிகள் வழங்கிய ஆதாரங்களின் அடிப்படையில் நிபுணர் குழுக்களின் ஆய்வுகள் இடம்பெறவுள்ளன.

தனிமைப்படுத்தப்பட்டிருந்த உலக சுகாதார அமைப்பு நிபுணர் குழுவினர் நேற்று வியாழக்கிழமை அவர்கள் தங்கியிருந்த விடுதிகளில் இருந்து வெளியேறிச் சென்றனர். அவர்களைச் சந்திக்க பத்திரிகையாளர்கள் குழுமியிருந்தபோதும் நிபுணர் குழுவைச் சேர்ந்தோர் ஊடகங்களிடம் எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை. (ஐ)

# உணவகத்தை திடீரெனத் திறந்து வாடிக்கையாளர்களுக்கு விருந்து!

## உரிமையாளர் கைதாகி காவலில்

பாரிஸ், ஜன. 29

கட்டுப்பாடுகளும் முடக்கங்களும் இப்படியே நீடித்தால் மக்கள் சட்ட மீறல்களில் இறங்கக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. அதை நிரூபிக்கின்ற சம்பவங்களும் தொடங்கி விட்டன.

பிரான்ஸின் நீஸ் நகரின் மத்தியில் உள்ள பிரபல உணவகம் ஒன்றை திடீரெனத் திறந்த அதன் உரிமையாளர் நூற்றுக்கணக்கான தனது வாடிக்கையாளர்களை அழைத்து உணவு பரிமாறியுள்ளார். நாடெங்கும் உணவகங்களின் உரிமையாளர்கள் தனது செயலைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

புதன்கிழமை மதியம் திடீரென உணவகம் வாடிக்கையாளர்களுக்குத் திறக்கப்பட்டது. பிற்பகல் இரண்டு மணிக்கு இடையில் நூற்றுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் விழுந்தடித்துவந்து உணவு உண்டனர். பொலிஸார் வரும் வரை அங்கு பெரும் மகிழ்ச்சிக் கலகலப்பு நீடித்தது. வாடிக்கையாளர்கள் உள் இருக்கைகளில் உணவு உண்டு களித்து



விட்டு உரிமையாளருக்கு நிதி உதவிகளையும் வழங்கிச் சென்றனர்.

நீஸ் நகரில் மிகவும் பிரபலமான அந்த உணவகத்துக்குள் உடனே பாய்ந்த பொலிஸார் உரிமையாளரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். (ஐ)

### பாகிஸ்தான் வீரர்களுக்கு விஸா!

# எழுத்தில் இந்தியாவிடம் உறுதி கேட்கிறது ஐ.சி.சி.

டுபாய், ஜன. 29

இந்தியாவில் நடக்கவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ் தான் வீரர்களுக்கு விஸா வழங்கப்படு வது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை கேட்டுள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டி இந்தியாவில் நடக்கவுள்ளது.

இந்நிலையிலேயே, இந்தியாவில் விளையாட பாகிஸ்தான் அணிக்கு விஸாக்கள் வழங்கப்படும் என்று எழுத்துமூர்வ உத்தரவாதம் அளிக்கு மாறு ஐ.சி.சி. இந்தியாவை கேட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், பாகிஸ்தான் வீரர்களுக்கு விஸா வழங்கப்படாவிட்டால் போட்டியின் எதிர்காலம் சீர்குலைந்துவிடும் என்றும் ஐ.சி.சி. கூறியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் நிர்வாகக்கூட்டத் தின் போது, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த விவகாரம் குறித்து கேள்வி எழுப் பிய பின்னர் இந்த விடயம் ஐ.சி.சி.யின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் அதிகரித்துவரும் இராஜதந் திர பதற்றங்களுக்கு மத்தியில் இந்த நடவடிக்கை வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)



## ஒருநாள் போட்டி தரவரிசை: விராட் கோலி முதலிடத்தில்

டுபாய், ஜன. 29

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஒருநாள் போட்டிக்கான வீரர்களின் தர வரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் துடுப்பாட்ட வரிசையில் இந்திய அணியின் தலைவர் விராட் கோலி 870 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். இரண்டாவது இடத்திலும் அந்த அணியின் ரோஹித் சர்மா 842 புள்ளிகளுடன் நீடிக்கிறார்.

பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் 791 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் நீடிக்கின்றார்.

இதேபோல, பந்து வீச்சு தரவரிசையில் நியூஸிலாந்து அணியின் ட்ரென்ட் போல்ட் முதல் இடத்திலும், ஆப்கானிஸ் தானின் முஜபுர் ரகுமான் இரண்டாவது இடத்திலும் இந்தியாவின் பும்ரா மூன்றாவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

சகலதுறை வரிசையில் 420 புள்ளிகளு டன் பங்களாதேஷின் வீரர் சகீப் அல் ஹசன் முதலிடத்தை மீண்டும் பிடித்துள் ளார்.

இலங்கையின் எந்த வீரரும் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ஐ.பி.எல். போட்டி எங்கே?

## ஏலம் முடிந்த பிறகே முடிவு

சென்னை, ஜன. 29

ஐ.பி.எல். ஏலம் முடிந்தபிறகு போட்டி நடைபெறும் இடம் முடிவு செய்யப்படும் என்று இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டு சபையின் உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக் கெட் போட்டி, கொரோனா தொற்று அச்சம் காரணமாக கடந்த செப்ரெம் பர் மாதம் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடந்தது. இந்நிலையில், இந்த ஆண்டுக்கான 14ஆவது ஐ.பி.எல். போட்டி இந்தியாவில்தான் நடத் தப்படும் என்று கிரிக்கெட் சபை ஏற்கனவே தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில் ஐ.பி.எல். போட் டிக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் 18ஆம் திகதி சென்னையில் நடக்கிறது. இந்த ஏலம் முடிவடைந்த பின்னரே போட்டி நடைபெறும் இடம் முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக மாற்று இடமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது. எனினும், இறுதி முடிவு இன்னமும் உறுதியாகவில்லை. (ஐ)

## 200 விக்கெட்கள் குறைந்த வயதில் ரபாடா சாதனை!



கராச்சி, ஜன. 29

தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ரபாடா, டெஸ்ட் கிரிக்கெட்டில் 200 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

டெஸ்ட் தொடரில் விளையாடுவதற் காக தென் ஆப்பிரிக்க அணி 14 வருடங்கள் கழித்து பாகிஸ்தானுக்கு வந்துள்ளது. இந்த அணிக்கு குயின்ரன் டி கொக் தலைமையேற்றுள்ளார்.

கராச்சியில் இரு அணிகளுக்கு இடையே நடை பெறும் முதல் டெஸ் டில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 220 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதன்பிறகு விளையாடிய பாகிஸ்தான் அணி நேற்று 378 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதில், தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ரபாடா 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். இதனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் 200 விக்கெட்களை வீழ்த்திய சாதனைப் பட்டியலில் ரபாடா இணைந்துள்ளார். குறைந்த வயதில் மற்றும் குறைந்த பந்துகளில் 200 டெஸ்ட் விக்கெட்களை எடுத்த வீரர் களின் பட்டியலில் ரபாடவுக்கும் ஓர் இடம் கிடைத்துள்ளது. தற்போதைய வேகப்பந்து

வீச்சாளர்களில் ரபாடா எந்தளவுக்குச் சாதித்து வருகிறார் என்பதை இந்தப் பட்டியல் வெளிப்படுத்து கிறது.

**குறைந்த வயதில் 200 விக்கெட்கள்**

வக்கார் யூனுஸ் - 38 டெஸ்ட்கள் - 24 வயது 26 நாள்கள்

கபில் தேவ் - 50 டெஸ்ட்கள் - 24 வயது 68 நாள்கள்

ஹர்பஜன் சிங் - 46 டெஸ்ட்கள் - 25 வயது 74 நாள்கள்

ரபாடா - 44 டெஸ்ட்கள் - 25 வயது 248 நாள்கள்

**குறைந்த பந்துகளில் 200 விக்கெட்கள்**

வக்கார் யூனுஸ் - 7730 பந்துகள்

டேல் ஸ்டெய்ன் - 7848 பந்துகள்

ரபாடா - 8154 பந்துகள் (ஐ)

## ‘கோபா டெல் ரே’ தொடர் காலிறுதியில் பார்ஸிலோனா

பார்ஸிலோனா, ஜன. 29

மெஸ்ஸியின் மீள் வருகையுடன் 2:1 என்ற கோல் கணக்கில் ரயோ வல்லெ கானோ அணியை வெற்றி கொண்டு காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது பார்ஸிலோனா அணி.

ஸ்பெயினின் கோபா டெல் ரே உதைபந்தாட்ட தொடரில் புதன்கிழமை இரவு நடந்த ஆட்டத்தில் பார்ஸிலோனா வல்லெ கானோ அணியை எதிர் கொண்டது.

ஸ்பானிஸ் சுப்பர்கோபா அணிக்கு எதிரான போட்டியில் சிவப்பு அட்டை காட்டப்பட்டமையால், இரு போட்டிகள் தடை விதிக்கப்பட்ட லயனல் மெஸ்ஸி இந்தப் போட்டியில் பங்கேற்றார்.

விறுவிறுப்பான ஆட்டத்தில் முதல் பாதி ஆட்டம் இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியில் வல்லெ கானோ அணியின் பிரான் கார்சியா முதலாவது கோலை அடித்தார்.

இதையடுத்து சுடுபிடித்த ஆட்டத்தில் 69ஆவது நிமிடத்தில், மெஸ்ஸி பதில் கோல் போட்டார். இதனால் ஆட்டம் 1:1 என்று சமநிலை பெற்றது. தொடர்ந்த ஆட்டத்தில் 80ஆவது நிமிடத்தில் பார்ஸிலோனாவின் பிரென்கி டி ஜோங் கோல் அடித்தார்.



ஆட்டம் முடியு வரை வல்லெகானோ அணியால் பதில் கோல் போட முடியவில்லை. இதையடுத்து பார்ஸிலோனா இந்தப் போட்டியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்ட பார்ஸி லோனா காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)

# பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றது அரசாங்கம்

## சாணக்கியன் எம்.பி. கடும் சாடல்



மட்டக்களப்பு,ஜன.29

**இந்த அரசாங்கம் பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் செயல்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றது என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

**மட்டு.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:**

கடந்த சில வாரங்களாக நடைபெற்றுவரும் செயல்களை பார்க்கும்போது வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள், தமிழ் அரசியல் தரப்புக்கள், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகள் கவனம் செலுத்தவேண்டிய மிகவும் ஆபத்தான நிலைமையை நாங்கள் காணமுடியும்.

அண்மையில் தொல்பொருள் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலையில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, ஒரு புத்தர் சிலையை வைத்து மதவழிபாடு செய்ததை நாங்கள் பார்க்கின்றோம். 50 - 60 இராணுவத்தினர் சகிதம் அங்கு சென்றுதான் அந்த நிகழ்வை நடத்தியிருந்தார். இதேநிலை தான் அன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் குசனார் மலைக்கும் வந்திருக்கும். நாங்கள் விதுர விக்கிரமநாயக்க வந்த நேரம் எதிர்ப்பை தெரிவித்திருக்காவிட்டால் இன்று குசனார் மலையில்கூட ஒரு புத்தர் சிலையை வைத்து மதவழிபாடுகளை நடத்தியிருப்பார்கள்.

வடமாகாணத்தின் சில ஆலயங்களின் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கின்ற செயல்பாடுகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

எதிர்வரும் காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற ஆலயங்களுக்குக்கூட மத வழிபாடுகள் செய்தல் என்ற அடிப்படையில் குற்றச்சாட்டுக்களை வைத்து சட்ட நடவடிக்கை எடுப்பார்களா? என்ற சந்தேகம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் மத்தியில் நிச்சயம் பதிய வேண்டும். எங்கள் மாவட்டத்தில் அனைவரும் கூறிய விடயம் என்னவென்றால் அபிவிருத்தியும் உரிமையும் வேண்டும் என்பதாகும். தற்போதைய நிலையில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்தியும் செய்யமாட்டார்கள், உரிமை தொடர்பாக வும் குரல் கொடுக்கமாட்டார்கள்.

உரிமை என்று சொல்கின்ற போது அவர்கள் கதைத்து எங்களுக்கு மாகாண சபை அதிகாரமோ அல்லது தனிநாட்டையோ பெற்றுத் தருவதல்ல. ஆகக் குறைந்தது எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற வளங்களை நாங்கள் பாதுகாக்க வேண்டும்.

யுத்தம் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்துள்ள நிலையில் புதிய ஆணைக்குழுவை நியமித்து எதனையும் கண்டுபிடிக்கமுடியாது. இந்த நாட்டில் மனித உரிமை மீறல்கள், இனப்படுகொலை நடந்துள்ளது. தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகள் நடந்துள்ளன. இவையெல்லாம் உலகெங்கும் அறிந்த உண்மை. இது தொடர்பில் ஒரு குழுவை நியமித்து ஆராயவேண்டிய அவசியம் இல்லை.

இந்த நாட்டில் ஜனாதிபதி குழுக்களை அமைப்பது தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். கிழக்கில் தொல்பொருள் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டது அதில் தமிழர்கள் எவரும் இல்லை. புதிய அரசமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கான குழுவில் பெயரளவில் ஒரு தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுவாக ஜனாதிபதி நியமிக்கும் ஆணைக்குழுக்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையே உள்ளது- என்றார்.(எ)

## நீதிக்கான சர்வதேச உந்துதலுக்கு பிரிட்டன் தலைமை தாங்கவேண்டும்

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு,ஜன.29

இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமைகள் நிலைமையை நிவர்த்தி செய்ய ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

அடுத்த மாதம் மனித உரிமைகள் பேரவை கூடும் போது ஒரு வலுவான தீர்மானத்தை முன்வைக்க உறுப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான அதன் உறுதிப்பாட்டைப் பின்பற்றுமாறும் பிரித்தானியாவை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை தொடர்பான ஐ.நாவின் மோசமான அறிக்கையைத் தொடர்ந்து இலங்கைக்கு எதிரான நீதிக்கான சர்வதேச உந்துதலுக்கு பிரித்தானியா தலைமை தாங்க வேண்டும் என்றும் அந்தச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

போர் நிறைவடைந்து சுமார் 11 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் மோசமடைந்து வரும் மனித உரிமை நிலைமை மற்றும் எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடிய ஆபத்து பற்றியும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் எச்சரித்துள்ளது. (எ)

# கொரோனா பாதிப்பிலிருந்து மீள்வதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம்

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



ஹற்றன்,ஜன.29

கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன. ஆனால் அரசாங்கத்தின் நோக்கம் கொரோனா பாதிப்பிலிருந்து விரைவாக மீள்வதாகும். இதற்காக அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. கடந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்திருந்தால் கிழக்கு முனையை இந்தியாவுக்கு பதிலாக வேறுநாடுகளுக்கு கொடுத்திருக்கும். கடந்த காலங்களில் அந்த அரசாங்கம் அதனைத்தான் செய்தது என தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஹற்றன் தொண்டமான் தொழில்பயிற்சி நிலையத்தில் முன்னெடுக்கப்படுகின்ற 16 கற்கை நெறிகள் நேற்று இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: தோட்டத்தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பில் கம்பனிகளுக்கு அதிக அழுத்தத்தை கொடுத்து வருகின்றோம்.

கடந்த அரசாங்கத்தில் இந்த அளவுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளத்தினை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது.

எனினும் கம்பனிகள் கொடுக்க முடியாது என்ற விடாப்பிடியிலேயே இருக்கின்றன.

இந்நிலையில் சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பளத்தினை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது ஒரு நல்ல விடயமாகும் இந்த விடயத்தினை அரசாங்கம் முன்னெடுத்தால் கூட்டு ஒப்பந்தத்தில் சம்பளப் பேச்சுவார்த்தையில் இருந்து விலகுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

எனினும் கூட்டு ஒப்பந்தம் என்பது வெறுமனே சம்பளப் பேச்சுவார்த்தை மட்டுமல்ல. அதில் தொழிலாளர்களின் நலன்புரி விடயங்கள் உரிமைகள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் தெரியாதவர்கள் கூட்டு ஒப்பந்தத்தை விட்டு வெளியேறுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

தொழிலாளர்களின் நலனில் எவராவது பொறுப்பேற்றால் நாங்கள் கூட்டு ஒப்பந்தத்திலிருந்து எப்போது வேண்டுமானாலும் விலகத் தயார்.

எமது ஒரே நோக்கம் மலையகத்தை சேர்ந்த இளைஞர்கள் பல்வேறு துறைகளில் வளர்ச்சி காண வேண்டும். இந்தத் துறைகள் மூலம் பொருளாதார நிலைமைகளை உயர்த்திக்கொள்ள வாய்ப்பு ஏற்பட வேண்டும். எனவே கடந்த காலங்களில் 12 ஆக இருந்த பாடநெறிகளை 14 ஆக அதிகரித்துள்ளோம். எனவே மாணவர்கள் இடைவிலகாது முழுமையான பயனைப் பெற்றுக்கொள்ளவேண்டும்- என்றார். (எ)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா குலசேகரியம்மா



பிறப்பு 18.08.1941 இறப்பு 27.01.2021

யாழ்.கரவெட்டி துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி திருநகரை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா குலசேகரியம்மா அவர்கள் 27.01.2021 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி, தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னையா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னையா கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமார் (லண்டன்), கிரிதரன் (கொழும்பு), கிரிஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிமலதேவா, காஞ்சனா, காவிந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தர்மராஜா, குலக்கொழுந்து மற்றும் கோபாலகிருஷ்ணன், காலஞ்சென்ற இராசாபூபதி, சிவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, வல்லிபுரம் மற்றும் சின்னம்மா, காலஞ்சென்ற இராசம்மா, தெய்வானை, அன்னலட்சுமி, செல்லம்மா, அன்னமுத்து, பரமேஸ்வரி, காலஞ்சென்ற செல்வமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஹரி, யாதவ், வருண், யுதிகா, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (28.01.2021) வியாழக்கிழமை அன்று கொழும்பு கல்கிசை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: பிள்ளைகள்.**
**தொடர்புகளுக்கு:**
கிரிஜா நிமலதேவா (மகள்) - +14168414322
கந்தையா கிரிதரன் (மகன்) - 0771337081

# ஊழல் நாடுகளின் பட்டியல் இலங்கைக்கு 94ஆவது இடம்!

**நியூயோர்க்,ஜன.29**

**உலகில் ஆகக் குறைவான ஊழல் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை 94வது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.**

உலகளாவிய ஊழல் எதிர்ப்பு இயக்கமான டிரான்ஸ்பரன்சி இன்ரர்நஷனல் வெளியிட்ட 2020 ஊழல் கண்ணோட்ட குறியீட்டில் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளது.

0 தொடக்கம் 100 வரையான புள்ளிகளுடன் நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் 180 நாடுகள் மற்றும் பிராந்தியங்கள் ஊழல் தொடர்பில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. டென்மார்க்கும் நியூசிலாந்தும் 88 புள்ளிகளைப் பெற்று இதில் ஆக உயரிய இடத்தை வகித்துள்ளன.

இந்தப் பட்டியலில் சிறந்த பத்து இடங்களில் இடம்பெற்ற ஒரே ஆசிய நாடாக சிங்கப்பூர் உள்ளது. 85 புள்ளிகளுடன் அது மூன்றாமிடத்தை பின்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளுடன் பகிர்ந்துள்ளது.

நோர்வே 7, நெதர்லாந்து 8, ஜேர்மனி, லக்ஸ்சம்பேர்க் 9, கனடா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஹொங்கொக் 11ஆம் இடங்களை பெற்றுள்ளன. இந்தியா 86வது இடத்தில் உள்ளது.

சிரியா, சோமாலியா மற்றும் தெற்கு சூடான் முறையே 14, 12 மற்றும் 12 புள்ளிகளுடன் கடைசி இடத்தில் உள்ளன.

2012 முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த கணிப்பீட்டு முறையில், ஈக்குவடோர் (39), கிரீஸ் (50), கயானா (41), மியான்மர் (28) மற்றும் தென் கொரியா (61) உள்ளிட்ட 26 நாடுகள் மதிப்பெண்களை கணிசமாக மேம்படுத்தியுள்ளன.

பொஸ்னியா ரூ ஹெர்சகோவினா (35), குவாத்தமாலா (25), லெபனான் (25), மலாவி (30), மோல்டா (53) மற்றும் போலந்து (56) உள்ளிட்ட 22 நாடுகள் தங்கள் மதிப்பெண்களைக் கணிசமாகக் குறைத்துள்ளன.

94வது இடத்தை இலங்கையுடன், எதியோப்பியா, கஜகஸ்தான், பிரேசில், பெரு, தன்சானியா, சூரினாம் ஆகிய நாடுகள் பகிர்ந்துள்ளன.

கொவிட்-19 பரவல் நிலவிய சூழலில் ஊழலைச் சமாளிக்க பல்வேறு உலக நாடுகள் திணறின என்றும், இப்பட்டியலின் உயரிய நிலையில் உள்ள நாடுகளின் அரசாங்கங்கள் தங்களது சுகாதாரக் கட்டமைப்பில் கூடுதலாக முதலீடு செய்து வருவதாகவும் டிரான்ஸ்பரன்சி இன்ரர்நஷனல் அமைப்பு தெரிவித்தது.

கொவிட்-19 போன்ற பெரும் நெருக்கடி காலகட்டத்தில் பொதுநிதி ஊழலில் விரயமாவது மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)



## யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் இணையதளம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். வணிகர் கழகத்தின் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு தைப்பூச தினமான நேற்று இடம்பெற்றது.

யாழ். வணிகர் கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளம் www.jaffna chamber of commerce .lk அங்குரார்ப்பண நிகழ்வு தைப்பூச தினமான நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாண வணிகர்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் ஆ. ஜெயசேகரன் மற்றும் உப தலைவரால் இந்த இணையதளம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். வணிகர் கழக இணையத்தளத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையங்களின் விவரங்கள், சுற்றுலா மையங்கள், தனியார் வைத்தியசாலைகள், ஏனைய வர்த்தகத்துறை சார்ந்த அனைத்து தகவல்களையும் உலகளாவிய ரீதியில் மக்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் யாழ். வணிகர்கள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## காரைதீவில் 5 மாணவர்கள் கொரோனாவுக்கு இலக்கு!

அம்பாறை, ஜன. 29

கல்முனை சுகாதார பிராந்தியததின் காரைதீவில் மேலும் ஐந்து மாணவருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காரைதீவிலுள்ள பாடசாலை ஒன்றில் இரு மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து தொற்றுக்குள்ளான மாணவர்களுடன் நெருங்கிப் பழகிய 32 மாணவர்கள், கடந்த திங்கட்கிழமை பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் கிடைத்த இந்தப் பி.சி.ஆர். முடிவுகளின் படி அந்த 32 பேரில் மூன்று மாணவர்களுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அவர்களை சிகிச்சை நிலையத்துக்கு சுகாதாரத்துறையினர் அழைத்துச் சென்றுள்ளன அம்மாணவர்களது வீட்டிலுள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஏற்கனவே கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்ட தாதிய உத்தியோகத்தரது பிள்ளைகள் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் காரைதீவின் இரு பிரபல பாடசாலைகளைச் சேர்ந்தவர்களாவர். இம்மாணவர்களும் சிகிச்சைக்காகக் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மாணவர்களிடையே கொரோனா தொற்றி வருவது பெற்றோர்கள், மாணவர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் பல பாடசாலைகளில் மாணவர்கள் வரவு காணப்படவில்லை. அத்துடன் சில பாடசாலைகளில் 10 வீதத்துக்கும் குறைவான மாணவர்களே வருகை தந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 200ஐ நெருங்குகிறது 60 வயது கடந்தோரின் கொரொனா மரணம்!

கொழும்பு, ஜன. 29

நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழப்பவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 200ஐ அண்மித்துள்ளது.

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களது விபரம் குறித்து கொவிட் -19 பரவலை தடுக்கும் தேசிய செயல்பாட்டு மத்திய நிலையம் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றால் நாட்டில் இதுவரை 290 பேர் உயிரிழந்தனர். இதில், 277 மரணங்கள் இரண்டாம் அலையில் பதிவான மரணங்களாகும்.

இதன்படி, இரண்டாம் அலையில் பதிவான மரணங்களில் 193 பேர் 60 வயதிற்கும் அதிகமானவர்கள் என்று தெரிய வருகின்றது. எவ்வாறாயினும், நடுத்தர வயதுடைய 72 பேரும் தொற்றால் மரணமாகினர்.

31 முதல் 40 வயதிற்குட்பட்ட 6 பேரும்,10 முதல் 30 வயதிற்குட்பட்ட 5 பேரும்,

10 வயதுக்கு குறைவான ஒரு கொவிட் மரணமும் பதிவாகியுள்ளன. (ஐ)



## வவுனியாவில் ஒளவையார் நினைவு கூரப்பட்டார்

வவுனியா, ஜன. 29

வவுனியா சின்னப்புதுக்குளத்தில் ஒளவையார் நேற்று நினைவுகூரப்பட்டார். வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் மாமடுவை சந்தியிலுள்ள ஒளவையார் சிலையடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நகர சபை உபதவிசாளர் சு.குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நகரசபை உறுப்பினர்களான சந்திரகுலசிங்கம் மோகன், ரி.கே.ராஜலிங்கம், சு.காண்டீபன், நா,சேனாதிராயா, சமூக ஆர்வலர்களான சந்திரகுமார் கண்ணன், மாதவன், விக்னா நகரசபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, நினைவுப் பேருரையை ஆசிரியர் உதயகுமார் நிகழ்த்தினார். (ஐ)

## மீன் என்றெண்ணி கடல் பாம்பை சந்தைக்கு கொண்டு சென்ற மீனவர்

மட்டக்களப்பு, ஜன. 29

மீனவர் ஒருவரின் வலையில் சிக்கிய அரியவகை கடல் பாம்பு ஒன்றை, அம்மீனவர் மீன் விற்பனை நிலையத்துக்கு கொண்டு சென்ற சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மீன் விற்பனை நிலையத்துக்கே இந்த கடல் பாம்பை மீனவர் கொண்டு வந்ததாக மீன் வியாபார நிலைய உரிமையாளர் தெரிவித்தார்.

தாம் மீன்பிடிக்கும்போது தனது வலையில் சிக்கியது புது வகை மீனாக இருக்குமோ எனும் சந்தேகத்தில் அதனை காண்பிப்பதற்காக குறித்த மீனவர், விற்பனை நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளார். அதனை பார்வையிட்ட ஏனைய மீனவர்கள், அது கடலில் உள்ள "அஞ்சாலை" எனும் 7 அடி உயரமும் 8 கிலோ எடையும் கொண்ட ஒருவகை பாம்பு என்று இனங்கண்டு தெரிவித்தனர்.







தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 1990ஆம் ஆண்டு உயர்தரம் பயின்ற மாணவர்களால் 20 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட திறன்வகுப்பு தொகுதி பாடசாலையிடம் கையளிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வு கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் இடம்பெற்றது.

ஈழநாடு
Eelanadu

# முல்லைத்தீவு பாடசாலை மைதானத்தில் பெருமளவு எறிகணைகள் மீட்கப்பட்டன!

## செய்தி சேகரிக்க இராணுவம் அனுமதி மறுப்பு

**முல்லைத்தீவு, ஜன.29**

**முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியின் மைதானத்திற்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆட்லறி ஷெல்கள் மீட்கப்பட்டன.**





கடந்த 25ஆம் திகதி மைதானத்தை துப்புரவு செய்தபோது வெடிபொருட்கள் அவதானிக்கப்பட்டன. இதனை பாடசாலை நிர்வாகம் பொலிஸாருக்கு அறிவித்தது. நீதிமன்ற அனுமதியைப் பெற்று பொலிஸாரும், இராணுவத்தினரின் குண்டு மீட்பு நிபுணர்களும் நேற்று அந்த இடத்தைத் தோண்டினர்.

இதனிடையே நேற்றுமுன்தினம் தொடக்கம் அப்பகுதியில் பொலிஸாரும், படையினரும் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்தே நேற்று இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டன. அங்கிருந்து நூற்றுக்கணக்கான எறிகணைகள் மீட்கப்பட்டன என்று கூறப்பட்டன.

ஆனால், செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. இதேபோன்று படங்கள் எவையேனும் வெளிவரக்கூடாது என்று செய்தி சேகரிப்புக்கு சென்ற ஊடகவியலாளர்களை இராணுவத்தினர் அச்சுறுத்தினர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, இந்த வெடிபொருட்கள் விடுதலைப் புலிகளுக்கு சொந்தமானவை என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# மகளை துஷ்பிரயோகத்திற்கு முயன்ற தந்தைக்கு மறியல்!

மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ்பிரிவில் பிரதேசத்தில் 13 வயதான சொந்த மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டார். இதையடுத்து அவரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ரி.தியாகேஸ்வரன் நேற்று உத்தரவிட்டார்.

மீன்பிடி தொழிலை மேற்கொண்டுவரும் 38 வயதான 4 பிள்ளைகளின் தந்தையான குறித்த நபர், சம்பவதினமான நேற்றுமுன்தினம் புதன்கிழமை மதுபோதையில் இருந்துள்ளார். அப்போதே 13 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றார்.

இது தொடர்பில் சிறுமியின் தாயார் பொலிஸாருக்கு அறிவித்தார். இதையடுத்து அவரைக் கைது செய்த பொலிஸார், அவரை நேற்று நீதிவான் ரி.தியாகேஸ்வரன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியிருந்தனர். (ஐ)

# கொரோனா தடுப்பூசி இறக்குமதி தனியார்துறைக்கு அனுமதியில்லை!

## அரச அறிவிப்பு

கொழும்பு, ஜன. 29

இலங்கைக்குக் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை இறக்குமதி செய்யத் தனியார் துறைக்கு அனுமதியில்லை என்று அரசு அறிவித்துள்ளது. கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளைக் கையாளும் ஜனாதிபதியின் குழு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

களஞ்சிய வசதிகள் உள்ள தனியார் துறையினர் கொரோனாத் தடுப்பூசிகளை இறக்குமதி செய்யத் தயாராகி வருகின்ற நிலையிலேயே, இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளைக் கையாளும் பொறுப்பை அரசு கொண்டுள்ள நிலையில், தனியார் துறைக்குத் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய அனுமதிப்பது பாதுகாப்பில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளை இறக்குமதி செய்யத் தனியார் துறை கோரிக்கை விடுத்த போதிலும், இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ அரசு தடை விதித்துள்ளது. (ஐ)

# ஊறணி கேணி புனரமைப்பு ஆரம்பம்

வடமராட்சி, ஜன. 29

வடமராட்சி - வல்வெட்டித்துறை ஊறணி தீர்த்தக் கேணியின் புனரமைப்பு பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

அங்கஜன் இராமநாதன் எம்.பி. இதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்தத் தீர்த்தக் கேணியை புனரமைப்பு செய்வதற்கு 4 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-2)

# விதிகளை மீறிய தவிசாளர்களை நீக்கும் வர்த்தமானி இரத்தானது!

திருகோணமலை, ஜன. 29

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபையின் அதிகாரத்தை தற்காலிகமாக உப தவிசாளராக வழங்கும் வகையில் 2020 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டதாக கிழக்கு மாகாண ஆளுநர் வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தார்.

இந்த வர்த்தமானிக்கு பதிலாக புதிய வர்த்தமானி அறிவித்தல் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

வரவு - செலவு திட்டத்தை முறைப்படி நிறைவேற்றாத கிழக்கில் 2 நகர சபைகள், 8 பிரதேச சபைகளின் தவிசாளர்களின் அதிகாரத்தை வறிதாக்கி, வர்த்தமானி மூலம் அறிவித்தார்.

வாழைச்சேனை பிரதேச சபையில் பிள்ளையான் தரப்பினர் ஆட்சியை இழந்துள்ளதால், அவர்களை காப்பாற்ற இந்த நடவடிக்கையை ஆளுநர் மேற்கொண்டுள்ளாரென எதிர்க் கட்சிகள் சாடியுள்ளன. (ஐ)

# காசநோய் பரவல் நாட்டில் உயர்வு

## சுவாசநோய் தேசிய அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 29

நாட்டில் காச நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

40 வீதமான காச நோயாளர்கள் மேல் மாகாணத்திற்குள் இருப்பதாக காசநோய் மற்றும் சுவாச நோய் தொடர்பான தேசிய அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் வருடாந்தம் 8 ஆயிரம் முதல் 9 ஆயிரம் காச நோயாளர்கள் பதிவாகின்றனர் என்று காசநோய் மற்றும் சுவாச நோய் தொடர்பான தேசிய அமைப்பின் பிரதி பணிப்பாளர், மருத்துவர் நிருபா பல்லேவத்த கூறியுள்ளார்.

55 வயதுக்கு மேற்பட்டவர்ளே இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அடையாளம் காணப்படாத சுமார் 5 ஆயிரம் பேர் நோய் காவிகளாக நம் மத்தியிலுள்ளனர் என்றும் மருத்துவர் குறிப்பிட்டார்.

இது மிகவும் ஆபத்தானது என கூறிய மருத்துவர், சில நோயாளர்கள் உரிய வகையில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளாமல் ஏனையோருக்கும் அதனை பரப்புகின்றனர். வருடத்தில் சுமார் 500 பேர் காச நோயினால் உயிரிழக்கின்றனர் என்றார்.

உரிய சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளும் பட்சத்தில், இதனை முழுமையாக கட்டுப்படுத்த முடியும் எனவும் நகரங்களில் வசிப்பவர்களிலேயே அதிகமாக இந்த நோய் பரவுகின்றதாகவும் அவர் கூறினார். (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15892 \|வே\|1975<br>Seperated\|கொழும்பு-06\| இந்து<br>It Engineer\|Sri lanka\|<br>செவ் : 02 \|மகம்(சிம்மம்)\|177செ.மீ | 16042\| செ\|1977<br>Divorced\|கண்டி\| இந்து<br>Nurse\| Sri lanka\| சூ.செவ் : 02<br>பூராடம்(தனுசு) \| 168செ.மீ |
| 15883\|மு \|1976<br>Divorced\| மஸ்கெலியா\| இந்து<br>Coordinator \| Qatar\|<br>பூசம்கடகம்)\|171செ.மீ | 16117\| வே \|1978<br>பருத்தித்துறை\|இந்து \|Sri Lanka\|<br>பூரம்(சிம்மம்)\|161செ.மீ |
| 16000\| வே\|1979<br>வல்வெட்டித்துறை\| இந்து\|Uk\|<br>Business\|பூசம்(கடகம்) \|170செ.மீ | 16135\| வே \|1979<br>நல்லூர்\| இந்து \|செவ் : 02<br>Computer Typist\| Sri lanka\|<br>கார்த்திகை(மேடம்) \|158செ.மீ |
| 15934 \|வே \|1980<br>யாழ்நகரம்\| இந்து \|செவ் : 12<br>Mechanical\|Sri lanka\|<br>சதயம்(கும்பம்)\|171செ.மீ | 15877\| வே\|1981<br>ஏளாலை\|Sri Lanka\|சூ.செவ் : 09<br>Insurance Agent \| இந்து<br>மகம் (சிம்மம்)\| 168செ.மீ |
| 15757\| வே \|1981<br>யாழ்நகரம்\| இந்து \| செவ் : 04<br>Mechanical\| UK<br>கேட்டை(விருச்சிகம்)\| 158செ.மீ | 16033\| வே \|1981<br>சாவகச்சேரி\| இந்து \| செவ் : 07<br>Grama Sevaka\|Sri lanka\|<br>பூசம்(கடகம்) \|155செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்


## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
1.00மணி : துறைக்கு அப்பால்(மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - நேரலை



5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10



**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கிற தலைவன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - "மலையக கல்வி வளர்ச்சி"



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : ஒய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**

12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**

7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## ஓம் ரீவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் ஏழாலை வசந்தபுரம் வசந்தநாக பூஷணி அம்மன் தீர்த்தத்திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் மூளாய் ஆதிபராசக்தி அம்மன் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலய தீர்த்தத்திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.